சுபீட்சம்
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 27.06.2023
supeedsam.com
supeedsam@gmail.com

# தொடர்ந்து ஐந்து நாட்கள் மூடப்படும் வங்கிகள்

## நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய சிக்கல் ஏற்படும் அபாயம்




இவ்வார இறுதியில் தொடர்ந்து ஐந்து நாட்கள் நாட்டில் வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால், நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய சிக்கல்கள் ஏற்படலாம் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரள,

இந்த விடுமுறை காரணமாக பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையலாம் என தெரிவித்தார். பொருளாதாரம் மேம்பட வேண்டுமானால், தொடர்ந்து நிதி ஓட்டம்

02 ஆம் பக்கத்தில்...

## ரணிலுடன் பேசி தீர்வைப் பெறலாம் என்று நம்புகின்றோம்!



'தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எதிர்வரும் ஜுலை மாதம் வரை பொறுமையாக இருக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி வழங்கியுள்ளார்.' இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

'தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக ஜனாதிபதியிடம்

02 ஆம் பக்கத்தில்...

## விடுதலை புலிகள் இல்லாத காலத்தில் தடி எடுத்தவன் எல்லாம் தண்டக் காறன் என்ற நிலை



தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாகும்போது தமிழரசுகட்சிதான் தலைமை கட்சியாக இருந்ததாகவும் விடுதலை புலிகள் இல்லாத காலத்தில் தடி எடுத்தவன் எல்லாம் தண்டக் காறன் என்ற நிலை தற்போது தோன்றியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழ்தேசியகூட்டமைப்பு ஆரம்பிக்கும் போது தமிழரசுக்கட்சி அதில் அங்கத்துவம் பெறவில்லையா

## இந்தியாவின் அழுத்தத்தால் அவசரமாக ஒன்று கூடிய மொட்டு; பஸில் தெரிவித்தது என்ன?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அடுத்த மாதம் டெல்கிக்கு செல்வதற்கு முன்னரே, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை கொழும்பிடமிருந்து இந்தியா எதிர்பார்ப்பதாக இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், பசில் ராஜபக்சவுக்கும்

02 ஆம் பக்கத்தில்...

## அஸ்வெசும திட்டத்துக்கு எமது பெயர்கள் உள்வாங்கப்படவில்லை; மக்கள் ஆர்ப்பாட்டம்



அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கு தங்களது பெயர்கள் உள்வாங்கப்படவில்லை என தெரிவித்து நாட்டின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

02 ஆம் பக்கத்தில்...

## சஜித்துடன் தோலைபேசியில் உரையாடிய ரணில்

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவருடனும் தொலைபேசியில் உரையாடியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் குறையவுள்ள எரிவாயுவின் விலை

எரிவாயு சிலிண்டரின் விலை குறைவடைய உள்ளதாகலிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் ஜுலை மாதம் முதல் பகுதியில் விலை

02 ஆம் பக்கத்தில்...

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma :34598
25605: cicero



MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா -வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# பல்கலைக்கழக மாணவர்கள் தற்கொலை செய்வது சமீபமாக அதிக அளவில் ஊடகங்களில் பதிவு

'அநியாயமாக பொறியியல் மாணவன் பலியாகிவிட்டானே , அநியாயமாக மருத்துவ மாணவன் பலியாகிவிட்டானே' என்ற தோரணையிலான இரங்கல் பதிவுகள் காணக் கிடைக்கின்றன.

எந்த மனித உயிரும் மதிப்புக் குறைந்தது அல்ல என்பதை நாம் முதலில் உணர வேண்டும். பொதுப் பார்வையில் பல்கலைக் கழகம் செல்பவர்கள் எல்லாவகையிலும் 'புத்திசாலிகள்' என்று கருதப்படுவதும் இவ்வளவு போட்டியிட்டு உயர்கல்வியில் நுழைந்தும் அதன் பயனைப் பெறவில்லையே என்று ஆதங்கப்படுவதும் இயல்பானதுதான்.

இலங்கையைப் பொறுத்தவரை கல்வி/ உயர்கல்வி என்பது ஒரு துறையில் - ஒரு பிரிவில் - காட்டப்படும் நினைவாற்றலை அதிகம் அடிப்படையாக வைத்து திறன்கள் மதிப்பிடப்படும் ஒரு முறையாகும்.

( அதனால்தான் பெட்டிக்கடை கூட நடாத்தத் தெரியாத வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகளையும், 'பிரிண்ட் பண்ண படிக்கவில்லை' என்று சொல்லும் கணினிப் பட்டதாரிகளையும் ...இன்னும் பல வேடிக்கைகளையும் நாம் காண முடிகிறது )

இந்த பல்கலைக்கழகம் செல்லும் போட்டியில் வெற்றிபெற பெரும்பாலான பிள்ளைகள் நம் சமூகத்தில் பாலர் வகுப்பிலிருந்தே பதப்படுத்தப்படுகின்றனர் .

விளைவு? - 'படிப்பு படிப்பு படிப்பு முக்கியம் .... வீட்டில் படிப்பு ரோட்டில் படிப்பு,.. பாடப் படிப்பு புத்தகப் படிப்பு ...நோட்ஸ் படிப்பு ..ஸ்கூல் படிப்பு டியூஷன் படிப்பு ..படிப்பு படிப்பு படிப்பு முக்கியம்'( சண்முகலிங்கனின்' வால்பேத்தைகள்' நாடகத்தில் கேட்டு இரசித்த பாடல் பகுதி )

பிள்ளை சமூகமயப் படுத்தப்படாமல் , நண்பர்களுடன் கூடி விளையாடி ஆயுளுக்கான ஒரு நட்பு வட்டத்தைப் பெறாமல் , எப்போதும் வகுப்பில் அதிக புள்ளிகள் பெறுவது எப்படி என்ற இலக்கோடு மட்டும் வளர்க்கப்படுவதே இந்த தற்கொலைகளிற்கான பிரதான காரணி.

மன அழுத்தம் என்பது மனித வாழ்வில் அடிக்கடி வந்து போகக்கூடிய ஒரு நிலைதான். பலவேளைகளில் தாயின்-குடும்ப உறவுகளின் புரிந்துணர்வுடனான அரவணைப்பே இந்த நிலையைப் போக்கி விடக் கூடியது .

ஒரு வயதின் பின் பிள்ளைகள் தமது உணர்வுகள் எல்லாவற்றையும் பெற்றோருடன் பகிர்வதில்லை. இந்த நிலையில்தான் (support groups) நண்பர்களுடனான பகிர்தலின முக்கியத்துவம் மிகவும் உணரப்படுகிறது. அதுவும் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்கும் நிலையில் நிச்சயம் அவர்களுக்கு மனம் விட்டுப் பேச ஆட்களும் மனம்விட்டுப் பேசும் குணமும் ( சிறுவயது முதல் பழகியிருத்தல் வேண்டும் ) தேவை.

ரோபோ போல பாடசாலை - அது முடிந்தால் டியூஷன் - அது முடிந்தால் வீட்டில் படிப்பு என்று இருப்பவர்கள் சமூகமயப்படாமலே வளர்ந்து விடுகிறார்கள். அதனால் அடுத்தவன் முகம் வாடியிருப்பதைக் கவனிப்பதும் இல்லை - கண்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படுவதுமில்லை. இதனால் இவரைப் பற்றிக் கவலைப்படவும் இன்னொருத்தன் இருப்பதில்லை.

அதிக ஃபோக்கஸ் தேவைப்படுகிற விஞ்ஞான மருத்துவ பொறியியல் துறைகளைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானோர் சமூக நடத்தைகளிலும், உலக அறிவிலும் , சமயோசித புத்தியிலும் பின்தங்கி இருப்பதை அவதானிக்கலாம். உதாரணத்திற்கு



டாக்டர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களின் ஒப்பீட்டளவிலான கம்பியூட்டர், தொடர்பாடல் , உலக அறிவு அதிர்ச்சி அளிக்கும் அளவில் குறைவானது. பழகியவர்கள் அறிந்திருப்பீர்கள்.

அவர்களது கல்வித்துறையின் அழுத்தம் காரணமாக வெளியே சிந்திக்க முடிவதில்லை - பயிற்றப்படுவதுமில்லை. இதில் விதிவிலக்கான பல நண்பர்கள் எனக்கு உண்டு.

உல அளவில் மருத்துவ மாணவர்கள் இன்ரேண் எனப்படும் உள்ளகப் பயிற்சிக் காலத்தில் அதிக அளவில் தற்கொலை செய்துகொள்கிறார்கள். இதைத் தடுக்க ஆஸ்த்திரேலியாவில் பல புதிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த டாக்டர் என்ஜினியர், பட்டப்படிப்பு என்ற ஓட்டப் போட்டியில் உள்ளவர்கள் பெரும்பான்மையும் பாடசாலைக் காலங்களில் புறக்கிருத்திய செயற்பாடுகளில் ஈடுபடாதவர்களே . இவை மன வளர்ச்சிக்கும் சமூக மயப்படலுக்கும் மிக மிக முக்கியமானவை.

இவ்வாறு ஒரு சின்ன வட்டத்தில் வாழ்ந்துவிட்டு , பல்கலைக்கழகத்தில் ஒரு காதல் தோல்வியைக் கூட பகிர நட்பின்றி , அல்லது பரீட்சைத் தோல்விக்கு ஆறுதல் சொல்ல ஆளின்றி மரணிப்பவர்களின் விதி - அவர்கள் பாலர் வகுப்புக் காலத்திலேயே எழுதப்பட்டுவிடுகிறது போல.

+ பிள்ளைகளின் ஆரோக்கியமான நட்பை, அன்பால் ஆன உறவு வட்டத்தை ஊக்குவியுங்கள் . முடிந்தால் நீங்களும் அவர்களது நண்பர்களுடன் உறவு பாராட்டுங்கள்

+ இசை, ஓவியம் , விளையாட்டு , கம்பியூட்டர் என்று அவர்கள் விரும்பும் புறக்கிருந்தியச் செயற்பாடுகளை ஊக்குவியுங்கள்.

+ மாற்று வழிகள் , மாற்றுத்துறைகள் என்று வாழ்வில் எதற்கும் பல மாற்றீடுகள் உண்டு என ஒரு மனிதன் உணர , அவனுள் படைப்புத்திறன் வளர்க்கப்பட வேண்டும். அதை ஊக்குவியுங்கள் ( பேச்சுப் போட்டிகள் , கவிதை , இசை , வாசிப்பு...)

+ 9 ஆம் வகுப்பு பிள்ளையும் ஓஆஆகு இரண்டாம் வருடம் படிப்பது போல் பில்டப் பண்ணி ஸ்கூல் கட் பண்ணினால் உலகம் அழிந்துவிடும் என்று முக்கிய சுற்றுப் பயணங்களுக்கோ போட்டிகளுக்கோ நிகழ்வுகளுக்கோ அனுப்பாது விட்டு விடாதீர்கள்.

+ நாலு நல்லது கெட்டது அறிந்த பிள்ளைகளாக வளருங்கள். மனங்களை நம்பிக்கை ஊட்டிப் பண்படுத்துங்கள். இந்த உலக வாழ்க்கை மிகச் சிறியது .

S.Manimaran
Positive Psychologist
**இது முகப்புத்தகப்பதிவு**

## கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை இன்றுடன் மூடப்படும்!

**( வி.ரி. சகாதேவராஜா)**

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை இன்று (27) செவ்வாய்க்கிழமையுடன் மூடப்படும் .

குறித்த காட்டுப்பாதை கடந்த ( 12) திங்கட்கிழமை காலை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது..

கடந்த 15 தினங்களில் சுமார் 45 ஆயிரம் அடியார்கள் பயணித்திருக்கலாம் என கூறப்படுகிறது.



கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா

உற்சவம் ஜுன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஜுலை மாதம் 4 திகதி

தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

அதேவேளை, உகந்தை மலை முருகனா லயத்தின் வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் ஜுலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி

தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

## மீண்டும் குறையவுள்ள எரிவாயுவின் விலை

குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இறுதியாக 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 452 ரூபாவால் குறைக்கப்பட்டு 3,186 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 181 ரூபாவால் குறைக்கப்பட்டு 1281 ரூபாவாக விற்பனையாகிறது.

அத்துடன் 2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 83 ரூபாவால் குறைக்கப்பட்டு 598 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், மீண்டும் எரிவாயு சிலிண்டரின் விலை குறைவடைய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விடுதலை புலிகள் இல்லாத காலத்தில்

என்று எமது செய்தியாளர் வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் தந்தை செல்வா ஆரம்பித்த கட்சிதான் தமிழர் விடுதலை கூட்டணி தமிழர் விடுதலை கூட்டணி இலங்கை தமிழரசுகட்சிக்கு பிறந்த குழந்தைதான்.

தந்தை செல்வா நினைத்திருந்தால் இலங்கை தமிழரசு கட்சியை கலைத்து விட்டு அல்லது இலங்கை தமிழரசுகட்சியின் பெயரை தமிழர் விடுதலை கூட்டணி என மாற்றி இருக்கலாம் அவர் அப்படி செய்யவில்லை.

அவர் ஒரு தீர்கதரிசி என்பதால் 1972,ல் தமிழர் கூட்டணி என கட்சியை தொடங்கி 1976,மே,14,ல் வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலை கூட்டணி என கட்சியை மாற்றி வட்டுக்கோட்டை தீர்மானத்தை எடுத்தார்.

அவர் அன்று இலங்கை தமிழரசு கட்சியை கலைத்து இருந்தால் 2004, ல் மீண்டும் இலங்கை தமிழரசுகட்சி எழுச்சி பெற்றிருக்காது.

தீர்கதரிசியான தந்தை செல்வா 1976, ல் சிந்தித்து இருப்பார் தமிழர் விடுதலை கூட்டணியை யாராவது தூக்கித்து ஓடலாம், அல்லது தாமே உரிமை கோரலாம் அப்படி ஒரு சந்தர்பம் வந்தால் மீண்டும் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி தொடர்ந்து பயணிக்கவேண்டும் என்பதை உணர்ந்தமையால் 2002, தேர்தலுடன் ஆனந்தசங்கரி தூக்கி சென்ற உதயசூரியன அஷ்தமித்து விட்டதால் 2004, ல் அடுத்த தீர்க தரிசனம் கொண்ட தேசிய தலைவர் பிரபாகரனால் தமிழ்தேசிய கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ அரசியல் கட்சி இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியாகவும் உத்தியோகபூர்வ சின்னம் வீடாகவும் அவரே கட்டளை இட்டார்.

வரலாறு தெரியாத சிலர் இலங்கை தமிழ் அரசுக்கட்சி 2001,ல் தமிழ்தேசிய கூட்டமைப்பு உருவாகும் போது இருக்கவில்லை என கூறுவது திட்டமிட்ட பொய் உண்மையை மறைக்கும் செயல்.

அப்படி இலங்கை தமிழ் அரசுக்கட்சி 2001, ல் தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் பெறவில்லை எனில் ஏன் 2004,ல் அங்கம் வகிக்காத இலங்கை தமிழ் அரசுக்கட்சியை தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு தலைமை தாங்க தேசிய தலைவர் பணித்தார்.

ரெலோ, ஈபிஆர்எல்எவ், அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் இந்த மூன்று கட்சிகளில் ஒன்றை அல்லவா தலைவர் விரல் நீட்டியிருக்கவேண்டும்.?

அப்படி அவர் செய்யாத காரணம் தமிழர் விடுதலை கூட்டணியில் உள்ள சம்மந்தன் ஐயா, மாவை அண்ணர் உட்பட பலரும் இலங்கை தமிழ் அரசுகட்சி உறுப்பினர்கள் என்பதாலும் ஏற்கனவே தமிழர் விடுதலை கூட்டணி செயலாளராக உள்ளவர் தமிழரசு கட்சி சம்மந்தன் ஐயாதான் என்பது தலைவர் நன்கு அறிந்தே அன்று அந்த முடிவை எடுத்தார் இது சாதாரண முன்பள்ளி மாணவர்களும் தெரிந்தவிடயம் பலருக்கு தெரிந்திருக்க வாய்புகள் இல்லை.

2001, தொடக்கம் 2010, வரை தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்தவர்களிடம் இந்த உண்மை விளங்கும்.

2001, ல் தமிழ்தேசிய கூட்டமைப்பை உருவாக்கும்போது கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் பொருளாளராக செயல்பட்ட நான் பல சுற்று பேச்சுவார்தைகளில் விடுதலைப்புலிகளுடனும், ஏனய கட்சிகளுடனும் கலந்து கொண்டவன் என்ற பீதியிலும் அங்கு பேசப்பட்ட விடயங்கள், நடந்து கொண்ட உண்மைகள், ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள் பல உண்டு அவைகளை கூறி`யாரின் மனதையும் புண்படுத்த நான் விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணிலுடன் பேசி தீர்வைப் பெறலாம்...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து ஜுலை மாதத்தின் பின் உரிய நடவடிக்கை எடுப்பதற்கே ஜனாதிபதி இவ்வாறு கால அவகாசம் விதித்துள்ளார்.

அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருக்கின்றோம்.

எமது பிரச்சினைக்கான தீர்வைத் தேடி நாம் இந்தியா செல்ல வேண்டிய தேவை இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நாம் நம்புகின்றோம்' என்றார்.

## சஜித்துடன் தொலைபேசியில் உரையாடிய ரணில்

ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அவர் இதனை தெரிவித்திருந்தார்.

அத்துடன் சில நிபந்தனைகளை அரசாங்கம் பூர்த்தி செய்யப்படாவிட்டால், ஜுலை மாதம் 01 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள,உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்காது என்றும் ஹர்ச டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் கடன் குறைப்பு நடவடிக்கைக்கு சென்றால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டத்தை தமது கட்சி ஆதரிக்காது என்றும் வைப்பாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்து, 29 ஆம் திகதி பொது நிதிக் குழுவுக்குப் பரிந்துரைத்து, சனிக்கிழமையன்று நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறுவதற்கான திட்டங்களை எதிர்க்கட்சிகள் கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த விடயம் தொடர்பில் தம்முடனும் எதிர்க்கட்சித் தலைவருடனும் தொலைபேசியில் உரையாடியதாக குறிப்பிட்டார்.

எனினும் அந்த தொலைபேசி உரையாடல் தொடர்பான விபரங்களை அவர் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அஸ்வெசும திட்டத்துக்கு எமது பெயர்கள்

இதன்படி, நுவரெலியா பிரதேச செயலகம் மற்றும் பிரதான அஞ்சல் அலுவலகம் முன்பாக இன்றைய தினம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உரிய தரப்பினர் அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர். எவ்வாறாயினும், குறித்த பட்டியல் தொடர்பான ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகளை முன்வைப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் 30ஆம் திகதி வரை மேன்முறையீடுகளை முன்வைப்பதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் அழுத்தத்தால் அவசரமாக ஒன்று

இது தொடர்பில் இந்தியா தெரியப்படுத்தியுள்ளது.

இதையடுத்தே பொதுஜன பெரமுனவின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களை பத்திரமுல்லை காரியாலயத்துக்கு அழைத்து பசில் ராஜபக்ச கலந்துரையாடியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ரணிலுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவுள்ளது.

அதற்கு முன்னர் இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியா எதிர்பார்ப்பதாக பசில் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

## தொடர்ந்து ஐந்து நாட்கள் மூடப்படும் வங்கிகள்

இருக்க வேண்டும். இவ்வாறான வங்கி விடுமுறை அறிவிப்பால் அதற்கு தடைகள் ஏற்படக்கூடும் என்றும் பேராசிரியர் தெரிவித்தார்.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்கும் நோக்கில் இந்த வங்கி விடுமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது, கடனை மறுசீரமைப்பது அத்தியாவசியமான விடயம் எனவும், அது வெளிப்படைத் தன்மையுடன் செய்யப்பட வேண்டும் எனவும் வசந்த அத்துகோரள சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார வல்லுநர்கள் உட்பட அறிவார்ந்தவர்களை அந்தச் செயற்பாட்டிற்கு ஒன்றிணைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிப்படைத்தன்மை இல்லாத உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு அரசாங்கத்தின் மீதான பொது மற்றும் வணிக நம்பிக்கையை மேலும் சிதைக்கும் என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், தற்போது நாட்டில் மறுசீரமைக்கப்படவுள்ள உள்நாட்டுக் கடன் தொகை 13,749 பில்லியன் ரூபாவாக காணப்படுகிறது.

இது மொத்த கடன் தொகையில் 90 வீதம் என கூறப்படுகிறது.

இந்த நாட்டின் மொத்த கடன் தொகை 15,350 பில்லியன் ரூபாவாகும்.

திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட தொகை 4,636 பில்லியன் ரூபாவாகும் மற்றும் 9,198 பில்லியன் ரூபா திறைசேரி பத்திரங்களுக்காக முன்மொழியப்பட்டுள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையை எளிதாக்கும் வகையில் ஜுன் 30ஆம் திகதி விசேட வங்கி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். அதன்படி, தொடர்ந்து ஐந்து நாட்கள் வங்கிகளுக்கு விடுமுறை அளிக்கப்படும். ஜுன் மாதம் 29ஆம் திகதி வியாழக்கிழமையன்று ஹஜ் பண்டிகை காரணமாகவும், 30ஆம் திகதியை ஹஜ் பண்டிகைக் குறித்து சிறப்பு விடுமுறையாகவும், ஜுலை மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் சனி மற்றும் ஞாயிறு தினங்களாக அமைந்துள்ளதால் அன்றைய இரு தினங்களும் வங்கிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுலை மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை எசல போயா தினத்தை முன்னிட்டு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு வங்கியின் செயல்பாடுகள் வழக்கம் போல் நடைபெறாது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 33 வது தியாகிகள் தின நினைவேந்தல்!!






(கனகராசா சரவணன்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 33வது நினைவு அஞ்சலி மட்டக்களப்பில் சனிகிழமை (24) எழுச்சிபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதித் தலைவருமான இரா.துரைரெட்ணம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், முன்னால் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் இந்திர குமார் பிரசன்னா, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உபதலைவர் பொன்.செல்லத்துரை (கேசவன்), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர்கள்,

உள்ளூராட்சி மன்றங்களின் முன்னால் உறுப்பினர்கள், உயிர்நீத்தவர்களின் உறவுகள், மற்றும் பிரதேச அமைப்பாளர்கள் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு படுகொலை செய்யப்பட்ட பத்மநாபாபின் திருஉருவ படத்திற்கு மலர்;மாலை அணிவித்து ஈகைச் சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

# மாணிக்க வாசகர் குருபூசை நிகழ்வும்






(க.ருத்திரன்)

'தமிழ் போற்றி சைவம் வளர்ப்போம்' எனும் தொணிப் பொருளில் மாணிக்க வாசகர் குருபூசை நிகழ்வும் ஆன்மீக எழுச்சி ஊர்வலமும், மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக கலாசார போட்டிகள் மற்றும் சிவ சின்னங்கள் வழங்கும் நிகழ்வும் ஞாயிற்றுக்கிமை பேத்தாழை குகநேசன் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கோறளைப்பற்று பிரதேச இந்து அறநெறி பாடாசாலை ஒன்றியம், ஸ்ரீ வீரையடி விநாயகர் அறநெறி பாடசாலை, வீரையடி விநாயகர் ஆலயம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிவதொண்டன் திருக் கூடம் ஆகிய ஆண்மீக அமைப்புக்கள் ஒன்றிணைந்து மேற்படி நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன் முதல் நிகழ்வாக ஆன்மீக எழுச்சி ஊர்வலமானது பேத்தாழை வாழைச்சேனை ஸ்ரீ வீரையடி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்று, மாணிக்க வாசகர் உருவப் படம் தாங்கியவாறு கைகளில் நந்திக் கொடிகள், பதாதைகள் ஏந்தியவாறு மங்கள வாத்தியம் இசைக்க ஆன்மீக சொற்பொழிவுடன் அறநெறி பாடசாலை மாணவர்கள் தமிழர் கலாச்சாரத்தை உணர்தும் முகமாக ஊர்வலமாக பாசிக்குடா வீதி வழியாக குகநேசன் கலாச்சார மண்டபத்தினை வந்தடைந்தனர்.

அங்கு அறநெறி பாடசாலை அதிபர் ச.கார்த்தீபன் தலைமையில் நிகழ்வுள் யாவும் நடைபெற்றது. மாணிக்க வாசகர் சுவாமிக்கு விசேட குருபூசை நடைபெற்று அதிதிகளால் மங்கள விளக்கேற்றப்பட்டு நிகழ்வுகள் யாவும் நடைபெற்றது. இதன் போது மாணவர்களின் கலை நிகழ்சிகள், மாணிக்க வாசகர் சுவாமியின் அற்புதங்கள், அவர் சைவத்திற்கு ஆற்றிய சேவைகள் தொடர்பாக மாணவர்கள் மற்றும் சைவப் புலவர்களால் சிறப்பு சொற்பொழிவுகள், கதை பிரசங்கம், வில்லுப் பாட்டு, பேச்சு, நடனம் என பல்வேறு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றது. இதே வேளை மடடக்களப்பு சிவதொண்டன் திருக் கூடத்தினால் மாணவர் மத்தியில் மாணிக்க வாசகர் சுவாமி தொடர்பான வினா, விடை போட்டி நடைபெற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்துடன் பிரதேச முன்பள்ளி மாவர்களின் திறமையினையும் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. அத்துடன் அற நெறி மாணவர்களுக்கு யோகா கலையினை பயிற்றுவித்த ஆசிரியர் மோ.சுதாகரன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்ப்பட்டார். இதேபோன்று மாவட்டத்தில் ஆன்மீக சேவையாற்றி வரும் சைவப் புலவர் சிவானந்த ஜோதி ஞானசூரியம் மற்றும் சிவதொண்டன் திருக்கூடத் தலைவர் கமல் ராஜ் ஆகியோரும் மலர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து மாணவர்களுக்கு உருத்திராட்சை சிவ சின்னம் அணிவிக்கப்பட்டது. நிகழ்வில் அதிதியாக இந்து கலாச்சார அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் நே.பிருந்தாபன் கலந்து கொண்டார்.

# யானைகளால் கதிர்காம கந்தன் ஆலய கொத்துப்பந்தல் புதுப்பிக்கும் சடங்கு








(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம கந்தன் ஆலய கொத்துப்பந்தல் புதுப்பிக்கும் சடங்கு வழமை போல் யானைகளால்(25) நடைபெற்றது.

இச் சடங்கு ஆறாம் நாள் சடங்காக பண்டு தொட்டு நடைபெற்று வருகிறது.

அதன்படி, முருகன் ஆலயத்தின் கொத்துப் பந்தல் மரக்கிளைகளால் புதுப்பிக்கும் சடங்கும் இந்நாளில் நடைபெற்றது.

முன்னதாக காட்டிலிருந்து வெட்டப் பட்ட மரக்கிளைகளை, வாசனா ஹஸ்திராஜய்யா தலைமையிலான யானை வர்க்கம் சுமந்துவந்து, மரக்கிளைகளை மாணிக்க கங்கையில் கழுவும். கதிர்காம பஸ்நாயக்க நிலமே டிசான் குணசேகர சகிதம் மரக் கிளைகளை யானைகள் தும்பிக்கையால் சுமந்து கொண்டு வந்து கந்தனாலய பந்தலில் இடும்.

மாணிக்க கங்கையில் கழுவப்பட்ட கிளைகள் ஆலயத்திற்கு முன்பாக போடப்பட்டிருந்த பந்தலில் யானைகளின் மூலம் மாற்றம் செய்யப்பட்டது.

அந்த காட்சியை ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து பார்த்து ரசித்தார்கள்.

# தோட்டத்தில் இருந்து தவறி விழுந்த முதியவர் பலி




(செ.திவாகரன் நானுஓயா)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியோரத்தில் பங்கலாவத்த பகுதியில் விவசாய நிலத்தில் தொழில் புரிந்த விவசாய தோட்டத்திலிருந்து (25) ஞாயிற்றுக் கிழமை மாலை தவறி விழுந்த முதியவரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த முதியவர் 70 வயதுடைய நானுஓயா எடின்புரோ பிரதேசத்தைச் சேர்ந்த வேலுசாமி காளியம்மா என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த முதியவர் விவசாய தோட்டத்தில் தொழில் புரிந்து கொண்டிருந்த போது மழையுடனான காலநிலை காரணமாக தோட்டத்தில் ஓரத்தில் இருந்து வழுக்கி நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் விழுந்து தலையில் பலமாக அடிப்பட்டதன் காரணமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது.

உயிரிழந்தவரின் சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காத்தான்குடி மத்திய கல்லூரியின் 93வது வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு நிகழ்வு






( ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரியின் 93வது வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு நிகழ்வு கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் எம்.ஏ.நிஹால் அஹமட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், மேலும் காத்தான்குடி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எப்.சில்மியா, காத்தான்குடி கோட்டக்கல்வி அதிகாரி எம்.எம்.கலாவுதீன், பாடசாலை முன்னாள் அதிபர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள், கல்வியலாளர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழுவினர், பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது உத்தியோகபூர்வ விளையாட்டுக் கொடியினை இல்ல விளையாட்டுக்கு பொறுப்பான ஆசிரியர் எஸ்.எச்.பிர்தௌஸ் ஏற்றியதுடன், ஆசிரியர் எம்.மோகனகுமாரினால் மூன்று மரியாதை வேட்டுக்களுடன், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீரினால் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு மாணவர்களின் ஓட்டப் போட்டி, பழைய மாணவர்களின் அஞ்சலோட்டம், அணிநடை கண்காட்சி, அணிநடை வகுப்பு, பாடசாலை அபிவிருத்திச் குழுவினரின் சங்கீத கதிரை, என்பன இடம்பெற்றதுடன், பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் க.புருசோத்மன் வழிகாட்டலில் மாணவர்களின் சாசக கண்காட்சி இடம்பெற்றதுடன் கலந்து கொண்டவர்களை நெகிழ்ச்சிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

நடைபெற்ற இல்ல விளையாட்டு போட்டியில் றூமி இல்லம் (நீலம்) 256 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தினையும், இக்பால் இல்லம் (சிவப்பு) 207 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தினையும், ஒமர் இல்லம் (பச்சை) 203 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது வெற்றி பெற்ற இல்லங்கள், வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கி வைக்கப்பட்டதுடன், மரதம் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இங்கு விளையாட்டு முகாமைத்துவக் குழுவினரால் கடந்த 1996.01.16 முதல் கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியராக இணைந்து ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக மற்றும் கல்லூரியின் வரலாற்றில் அதிகூடிய காலம் அதிபராக கடமையாற்றி கல்லூரியின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்பட்டமைக்காக ஆசிரியர் எஸ்.எச்.பிர்தௌஸ் அவர்களுக்கு கல்லூரியின் 93வது வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# வட, கிழக்கில் தற்போது நடந்து கோண்டிருப்பது ஒரு மேளன யுத்தம்

## நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவிப்பு!!

(கனகராசா சரவணன்)

இந்த நாட்டில் தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைக்கவேண்டும் திட்டமிட்டு 1949 ம் ஆண்டு முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா கிழக்கு மாகாணத்திலே கல்லோயா குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்த காலம் தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களின் காணிகள் அபகரித்து விகாரைகள் அமைக்கும் திட்டங்களை செய்து வருகின்றனாட.; என வடக்கு கிழக்கில் தற்போது நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 33வது நினைவு அஞ்சலி சனிக்;கிழமை (24) அனுஸ்டிக்கப்பட்டது இதில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்

தமிழீழ விடுதலை போராட்டத்திலே பல நாட்டகள் தமிழ் மக்களால் மறக்க முடியாத வடுக்கள் நிறைந்த நாளாக இருக்கின்றது. அந்த நாட்களின் ஒரு நாளாகவே 19 யூன் 1990 ம் ஆண்டு விடுதலைப் போரட்ட பாதையிலே ஒரு கறுப்பு புள்ளி விழுந்த நாளாகும்.

தமிழ் மக்கள் ஆயுத போராட்டத்தை விரும்புணீ ஏற்றுக் கொண்டவர்கள் அல்ல ஆயுத போராட்டம் எங்கள் மீது திணிக்கப்பட்டது இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து நாங்கள் தமிழினம் இரண்டாம் தர பிரஜைகளாக இந்த நாட்டிலே அழைக்கப்பட்டோம்.

இவ்வாறு தனி சிங்களசட்டம் கொண்டுவரப்பட்டதில் இருந்து தமிழர்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட 1957, 1958, 1978, போன்ற கலவரங்களை தொடர்ந்து மிகவும் மோசமாக83 கலவரத்தை உருவாக்கி கப்பல் மூலம் வட கிழக்கிற்கு சொந்த நாட்டிலே அகதிகளை அனுப்பிய வரலாறு ஆகும் இவ்வாறு தமிழர்கள் மீது நடந்தேறிய இனழிப்பிற்கு எதிராக அகிம்சை மூலமாக போரடிய எமது தலைவர்கள் அதில் நம்பிக்கையிழந்து உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாங்கள் ஆயுத போராட்டத்திற்குள் தள்ளப்பட்டோம் அதனால் 1969 ஆயுத போராட்டம் முதல் முதல் தமிழ்ஈழ விடுதலை இயக்கம் அதில் பிரபாகரன் உட்பட போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் இருந்தார்கள் இந்த நிலையில் 83 கலவரத்தை அடுத்து ஈழவிடுதலை போராட்டம் ஒரு வித்தியாசமான பாதைக்குள் சென்றது. முன்னணியில் 5 போராட்ட இயக்கங்கள் இருந்தது அப்போது அனைவரும் ஒன்றிணைந்து போராடினால் தான் எமது இலக்கை அடையமுடியும் என 1984 ம் ஆண்டு ஈழ தேசிய விடுதலை முன்னணி என்று ஈரோஸ், ரொலே, ஈபிஆர்எல்எப். என மூன்றும் ரி.என்.எல்.எப். உருவாகியது பின்னர் விடுதலைப் புலிகளும் அதில் இணைந்தனர் என்பது வரலாறுகள்.

ஆனால் விடுதலைப் புலிகள் மாத்திரம் வடகிழக்கிலே இந்த போராட்ட பாதையில் நின்று இருந்தாலும் 2009 மே 18 உடன் இந்த ஆயத போராட்டம் முற்று முழுதாக மௌனிக்கப்பட்டது இந்த போரட்டம் மௌனிக்கப்படும் முன்னர் பல தலைவர்களை இழந்திருக்கின்றோம் அதில் போரட்ட தலைவர்கள் மாத்திரமல்ல மிதவாத கட்சியான தழிழர் விடுதலைக் கூட்டணி தமிழரசு கட்சி போன்றவற்றின் தலைவர்கள் அமிர்தலிங்கம் உட்பட பல தலைவர்களை இழந்திருக்கின்றோம்.

ஜே,ஆர். ஜெயவர்த்தனா காலத்திலே சமாதன பேச்சுக்கே இடமில்லாமல் தமிழ் மக்களின் குரல்வலையை நசுக்கினார் 2009 வரை தமிழ் மக்களை வஞ்சித்துக் கொண்ட அரசு ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு வடகிழக்கில் வித்தியதசமான ஒரு திணிப்பை செய்துவருகின்றது

அதுதான் தமிழர் தேசத்தில் விகாரைகள் அமைக்கவேண்டும் தமிழரின் குடிபரம்பலை எவ்வளவு வேகமாக மாற்றி அமைக்கவேண்டும் இணைந்திருந்த வடகிழக்கை வெலிஓயா குடியேற்றம் மூலம் நில தொடர்பற்ற மாகாணங்களாக இரண்டு மாகாணங்களையும் பிரிப்பது போன்ற நடவடிக்கையை திட்டமிட்டு செய்துவருகின்றது

தற்போதைய எதிர்கட்சி தலைவாரான சஜித் நல்லாட்சி காலத்தில் புத்தசாசன அமைச்சராக இருந்தபோது வடகிழக்கில் ஆயிரம் விகாரை அமைக்கவேண்டும் என்ற அவர்; தற்போது இலங்கையிலே ஆயிரம் தாது கோபுரங்களை படிப்படியாக அமைக்கவேண்டும் என கூறியுள்ளார்

ஆகவே தற்போது வடகிழக்கில் நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம் தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு தமிழர் பிரதேசங்கள் எங்கும் விகாரைகள் குறிபாக உயர்ந்த மலைகளில் அமைப்பது சுற்றுலா பயணிகள் கூட இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை பறைசாற்றுவதற்காக இந்த திட்டங்களை செய்து வருகின்றனர்.

குருந்தூர் மலையிலே பூர்வீகமாக தமிழ் மக்கள் வாழ்ந்த காணிகள் இன்று தொல்பொருள் என்று பெயரில் அபகரிக்கட்டுள்ளது சரத்வீரசேகர, உதயகம்பன்வெல, விமல்வீரன்ச போன்ற அரசியல்வாதிகள் தங்களது நிரச்சி நிழலுக்குள் செயலாற்றிக் கொண்டு வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் தாயகம் என தம்பட்டம் அடிக்கும் தமிழர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாக சரத் வீரதேசகர தெரிவித்தார் எனவே தமிழர்களுடைய தாகம் விடுதலை நோக்கம் இன்னும் தனியவில்லை என அமைச்சருக்கு தெரியவேண்டும். அதேவேளை கோட்பாயாவின் விசுவாசியான புதிதாக தேசிய பட்டியல் மூலமாக பாராளுமன்றம் வந்த வெளிநாட்டு அமைச்சர் ஒரே இரவில் தீர்வை கொடுக்க முடியாது கிடைப்பதை பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார் எனவே இனப்பிரச்சனை தோன்றி எத்தனை ஆண்டுகள் என அவருக்கு தெரியாமல் இருக்கலாம், ஒரே இரவில் இந்த பிரச்சனைக்கான தீர்வை கேட்கவில்லை நாடு சுதந்திரமடைந்த காலம் இருந்தே தமிழர்கள் இனப்பரச்சனையை தீர்ப்பதற்காக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம் தந்தை செல்வா பேச்சுவார்த்தை , பண்டா செல்வா ஒப்;பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், மற்றும் திம்பு பேச்சுவார்த்தை, 2001 பேச்சுவார்த்தை 2009 பின் மகிந்தவுடன் 18 சுற்று பேச்சுவார்த்தை. உட்பட தற்போதும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்து கொண்டுதான் இருக்கின்றது

தற்போதைய ஜனாதிபதி ஒரு சர்வதேச அழுத்தத்தின் மத்தியிலே இந்த நாட்டை நடாத்துகின்றார் 1987 இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது அதன் மூலம் உருவாகிய குறைமாத குழந்தையான மாகாணசபை முறைமை ஏற்படுத்தப்பட்டது இந்த 13 திருத்த சட்டத்தை முற்று முழுதாக தமிழ் மக்களின் இனப் பிரச்சனைக்காக யாரும் ஏற்றுக் கொள்ள வில்லை, ஆனால் அரசியல் அதிகாரத்தில் ஆசையற்ற பத்மநாபா கிடைப்பதை எற்றுக் கொண்டு அதிலிருந்து நாங்கள் முன்னேறிச் செல்வோம் என்ற அடிப்படையில் அந்த மாகாணசபை அதிகாரத்தை பெற்றுக் கொண்ட முதல் தலைவர் பத்மநாபா அதிகாரத்தில் ஆசையில்லாத காரணத்தால் முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ள வில்லை அப்படிப்பட்ட ஒரு தலைவரது ஞாபகாத்த தினம்தான் இந்த 19 யூன் என்பது

எனவே நாங்கள் கிடைப்பதை பெற்றுக் கொண்டு எங்கள் மக்களுக்கு துரோகம் செய்வதற்கு நாங்கள் அரசியல் செய்யவில்லை. தமிழ் மீசிய கூட்டடைப்பு விடுதலைப் புலிகள் இயங்கு நிலை இருந்த காலத்திலே 2001 உருவாக்கப்பட்டது அப்போது கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து தமிழ் மக்களுக்கு ஒரு பலமான அரசியல் சக்தி இருக்கவேண்டு; என்ற காரணத்திற்காக இந்த கூட்டமைப்பை உருவாகினோம்

2009 ம் வரை தமிழ் தேசிய கூட்டமைப்பு அசைக்கமுடியத சக்த்தியாக இருந்தது 2004 தமிழ் விடுதலை கூட்டணி வெளியேறியது 2010 அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியேறியது 2015 ஈபிஆர்எல்எப் வெளியேறியது அதேபோன்று 2023 தமிழரசு கட்சி வெளியேறியுள்ளது ஆனால் தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு பலமான 5 கட்சிகள் கொண்ட அணியாக செயற்படுகின்றோம். என்றார்.

# கல்முனை இஸ்லாமாபாத் விளையாட்டரங்கின் இன்றைய நிலை





(எஸ்.சிராஜுதீன் )

ஆழிப்பேரலை அனர்த்.தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களை ஆற்றுப்படுத்த அமைக்கப்பட்ட கல்முனை இஸ்லாமாபாத் வீடமைப்புத்தொகுதியின் சிறுவர் விளையாட்டரங்கையே இப்போது காண்கிறீர்கள்.

புற்கள்வளர்ந்தும் இணைக்கப்பட்ட கம்பிகள் இறந்தும் ஊர்வனங்களின் உறைவிடமாகவும் காட்சியளிக்கிறது.

முழு நேரம் மாணவர் கற்றலில் ஈடுபடுவதை கல்வியியலாளர்கள் வெறுக்கின்றனர். மாணவர்களின் உடல் உள மனவெழுச்சிகள் மேம்பட மாலைநேர விளைய்டரங்கு அவசியமாகும் இச்சிறுவர் விளையாட்டரங்கை திருத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் திருமணம்!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் முற்று முழுவதுமாக விழிப்புலனற்ற இருவருக்கு திருமணத்தினை நடாத்தி சமூக மேம்பாட்டிற்கான முன்னுதாரன செயற்பாடொன்றினை இச்சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

ஆரையம்பதியைச் சேர்ந்த பொன்னம்பலம் சுஜிதரன் மற்றும் திருக்கோவிலைச் சேர்ந்த சண்முகம்பிள்ளை சசிவதனி ஆகிய இருவருக்குமே திருமணத்தினை நிகழ்த்திவைத்துள்ளனர்.

2023.06.25 திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்த வேளையில் மண்முனைப்பற்று - ஆரையம்பதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம், மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் தலைவர் பாவலர் சாந்தி முகைதீன் உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் மற்றும் உதயம் விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், திருமண தம்பதியினரின் குடும்ப உறவினர்கள் என பெருமளவிலானோர் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்ததோடு அன்பளிப்புக்களையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஆரையூர் கலைஞர் கலாவிபூசனம் எஸ்.ரகுதாஸ் தலைமையிலான கலைஞர் குழுவினர் மணமக்களை வாழ்த்தும் வண்ணம் பாடல்களை பாடி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியதுடன், இவ்வாறான விழிப்புலனற்றோராக இருக்கும் விசேட தேவையுடையவர்களை தேடி திருமணம் முடித்து வைப்பதன் ஊடாக எந்தவொரு மனிதரும் வாழ்க்கையில் தனிமையானவர்கள் அல்ல என்பதை உலகிற்கு உணர்த்தும் வண்ணமே இவ்வாறான வர்களை தேடி திருமனம் முடித்து வைப்பதாக மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் செயலாளரும் ஓய்வுபெற்ற பொறிவளருமான துரைராஜா லெட்சுமிகாந்தன் இதன்போது தெரிவித்துள்ளார்.

# தேங்காய் பறித்து தருவதாக சிறுமியை ஏமாற்றி பாலியல் துஸ்பிரயோக முயற்சி; சந்தேக நபர் கைது

(பாறுக் ஷிஹான்)

வீட்டின் வளவில் விளையாடி கொண்டிருந்த சிறுமியை ஏமாற்றி அழைத்து சென்று அங்க சேட்டை செய்த முதியவரை கல்முனைதலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமைய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை(25) மாலை இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதன் போது தனது வீட்டின் வளவில் விளையாடிக்கொண்டிருந்த சுமார் 8 வயதினை உடைய சிறுமியை அவ்வழியால் மாடு மேய்த்து கொண்டிருந்த 64 வயது மதிக்கதக்க முதியவர் தேங்காய் பறித்து தருவதாக அழைத்து சென்று அச்சிறுமியை பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்துள்ளதாக சிறுமியின் உறவினரால் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய சந்தேக நபரான முதியவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இன்று நீதிமன்ற நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையக சிறுவர் பெண்கள் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

# திருமலையில் மான்களை பாதுகாக்க கிழக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை!



(ஹஸ்பர்)

திருகோணமலை நகரில் உள்ள மான்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்கும் செயற்பாடு (24) காலை ஆரம்பிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம், நகரசபையின் அனுசரணையுடன் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது

திருகோணமலை நகர சபையும் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் இணைந்து திருகோணமலை நகரில் உள்ள மான்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்கும் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.இந்த செயற்றிட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தவிசாளர், திருகோணமலை நகர சபை செயலாளர், திருகோணமலை பிரதேச செயலாளர், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது, கடந்த காலங்களில் திருகோணமலையில் 20-க்கும் மேற்பட்ட மான்கள் பிளாஸ்டிக் கழிவுகளை உண்டு உயிரிழந்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

மான்களின் பாதுகாப்பு, உணவு போன்ற விடயங்களைக் கவனிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் அதிகமான மான்களைக் கொண்ட இடமாக திருகோணமலை திகழும் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

# சம்மாந்துறை அல் ஹம்றாவில் செயற்பாட்டறை திறப்பு விழா

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை அல் ஹம்றா வித்தியாலயத்தில் செயற்பாட்டறை திறப்பு விழாவும், வகுப்பறை அலங்காரப் போட்டியும், பரிசு வழங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் . உமர் மௌலானா கலந்து கொண்டு வகுப்பறை அலங்காரப் போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பரிசில் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் 1ம் இடத்தை செயற்பாட்டறையும், 2ம் இடத்தை தரம் 1 வகுப்பறையும், 3ம் இடத்தை தரம் 3 வகுப்பறையும் தட்டிக் கொண்டது.

மேலும் இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிதர்சினி. மகேந்திரகுமார், ஏஎல்ஏ. மஜீட், திருமதி ஏசி. நுஸ்ரத் நிலோபறா, சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம் ரிஎம். ஜனோபர், அதிபர்களான ஏ. முகம்மட் றிஸ்வான், எம்மிஎம்.சபிர், யூஎல் லாபிர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. நஸீர், வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளர் ஏ. யூசுப், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் அஏஎம்.பைறோஜ், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.



# கதிர்காமத்திலுள்ள ஏழு மலைகளை அறிவீர்களா?

## வியப்பில் ஆழ்த்தும் விபூதி மலை!!!





**வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**

ஏழுமலையான் கதிர்காம கந்தன் ஆலயம் என்றால் அனைவருக்கும் கதிரைமலை ஞாபகத்துக்கு வரும்.

இந்த கதிரைமலையை ஏழு மலை என்றும் அழைப்பர்.

உண்மையில் அது மட்டுமல்ல. அங்கு ஏழு மலைகள் உள்ளன.

கதிர்காமத்தை சுற்றியுள்ள ஏழு மலைகளும் ஏழு வகையான மஹத்துவம் வாய்ந்தவை.

அதில் கதிரமலை மட்டுமே எல்லோரும் செல்ல அனுமதி உண்டு. அது தவிர வள்ளி மலை, தெய்வானை மலை, இடும்பன் மலை, நாக மலை, பச்சைமலை, களுகு மலை மற்றும் விபூதி மலை ஆகிய மலைகளுடன் சேர்ந்து ஏழுமலைகளின் அதிசய சக்தி கதிர்காம மண்ணை காலம் காலமாக இயக்குகிறது.

வியப்பில் ஆழ்த்தும் விபூதி மலை!.

இந்த ஏழுமலைகளில் விபூதி மலை பற்றி இம் முறை அறியக் கூடியதாக இருந்தது.

இது மிகவும் சிறப்பான தன்மை வாய்ந்தது. கதிர்காமத்தில் இருந்து கித்துளபவ வழியாக சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் இவ் விபூதி மலை அமைந்துள்ளது.

கதிர்காம கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் திருவிழா நெருங்கும் வேளையில் அது இயற்கையாகவே தரையிலிருந்து வெளிப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மே மற்றும் ஜூன் மாதங்களில் சதா திருநீற்றுச்சுரங்கம் வரும். ஒவ்வொரு ஆண்டும், கதிர்காம மலையின் அழகிய திருவிழா நெருங்கும்போது, இந்த வெள்ளை மாவு போன்ற பொருட்கள் தரையில் தோன்றும். இந்த பகுதி ஹூனுகெட்டாவல என்றும், முன்னொரு காலத்தில் திருநீறுமலை, விபூதி கண்ட மலை என்றும் அழைக்கப்பட்டது.

விபூதி மலையில் ஆடி மாதத்தில் திருவிழா காலங்களில் மட்டும் இயற்கையாக உற்பத்தியாகும் விபூதியே இங்கு பிரசாதமாக இன்றுவரை வழங்கப்படுகிறது.

குறிப்பிட்ட வம்சத்தினரே இன்றுவரை இங்கு திருநீறு எடுக்கின்றனர்.

கடந்த வாரம் இவ் விபூதிமலைக்கு சித்தர்கள் குரல் அன்பர்கள் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில் சென்று பூஜை செய்து முறையாக விபூதி எடுத்த அற்புதமான நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இது தொடர்பாக காலாகாலமாக விபூதி எடுத்து விற்பனை செய்து வரும் அங்குள்ள ரவீந்திரன் என்ற இளைஞரை பேட்டி கண்ட போது அவர் பின்வருமாறு தெரிவித்தார்..

'நாங்கள் பிறந்த நாளிலிருந்து இந்த தொழிலைத்தான் செய்து வருகின்றோம். இந்த விபூதி மலையானது கதிர்காம கந்தனின் ஆடிவேல் விழா திருவிழா காலத்தில் மாத்திரம் தான் இப்படியாக மணல் போன்று விபூதியாக வரும். ஏனைய நாட்களில் வெள்ளை நிற பாறையாகவே இருக்கும் .உடைக்கவும் முடியாது .எடுக்கவும் முடியாது .இது கந்தன் அருளாகத்தான் இருக்கும் .' என்றார்.

விபூதி மலையும் ஓர் அதிசயம் தான்.

# மன்னார் பிரஜைகள் குழு ஆளுநர் சபை உறுப்பினர்கள் தேரிவு

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பிரஜைகள் குழுவின் பொதுக்கூட்டம் இதன் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் சனிக்கிழமை (24) தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள கலையருவி மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது

இதைத் தொடர்ந்து 2018-2023 ஆம் ஆண்டுக்கான மன்னார் பிரஜைகள் குழுவின் ஆளுநர்சபை கலைக்கப்பட்டு 2023-2026 ஆண்டிற்கான புதிய ஆளுநர்சபை தெரிவும் இடம் பெற்றது.

இந்த ஆளுநர்சபை உறுப்பினர்கள் தெரிவானது மன்னார் தேர்தல் உதவி ஆணையாளர் வேலாயுதம் சிவராஜா, மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் . சமூதாய சீர்திருத்த உத்தியோகத்தர் கே.எம்.நஜீம் மற்றும் மன்னார் ஆயரின் பிரதிநிதியாக கலந்துக் கொண்ட குருமுதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் ஆகியோரின் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த உறுப்பினர்கள் தெரிவானது தேர்தல் வாக்களிப்பு முறையில் நடைபெற்றது. 11 உறுப்பினர்கள் தெரிவுக்காக 23 நபர்கள் இவ்தேர்தலில் போட்டியிட்டனர்.

இதில் எம்.எஸ்.எம்.சபூர்தீன் (சிரேஸ்ட சட்டத்தரனி) அ.வில்பிரட் அர்ஜூன் (சிரேஸ்ட சட்டத்தரனி) அ.அன்ரன் றேமன்ஸ் குரூஸ் (தலைவர் இலங்கை தேசிய நிர்மானிய சங்கம்) லோ.கொன்சால் வாஸ் கூஞ்ஞ (சிரேஷ்ட ஊடகவியலாளர்) கொ.தயாளராஜன் (அரச சார்பற்ற நிறுவன இணைப்பாளர்) ச.செசாரியஸ் பெர்னாண்டோ (ஓய்வுநிலை வங்கி முகாமையாளர்) அருட்பணி ச.மாக்கஸ் அடிகளார் . திருமதி ச.றெஜினா இராமலிங்கம் ( ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்) பி.றெஜி ஜெயபாலன் (அரச சார்பற்ற நிறுவன் இணைப்பாளர்) , அ.பத்திநாதன் குரூஸ் (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்) , அருட்பணி எ.டெஸ்மன் அஞ்சலோ அடிகளார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# பட்டங்களைப் பெற்று பெயர்களை அலங்கரிப்பதை விட நல்ல புத்தகங்களை படித்து மனங்களை விரிவு படுத்துங்கள்

## இராணுவ மேஜர் உஷாம் சுபையிர் தெரிவிப்பு





**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

ஆசிரியர்கள் பல பட்டங்களை பெற்று பெயர்களை அலங்கரிப்பதை விட நல்ல பல புத்தகங்களை படித்து மனங்களை விரிவுபடுத்த வேண்டும் என இலங்கை இராணுவத்தில் மேஜராக கடமையாற்றும் மருதமுனையை சேர்ந்த உசாம் சுபையிர் தெரிவித்தார்.

அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி (சிங்களம்) 150 மணித்தியாலயங்களை தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களின் இறுதி நாள் நிகழ்வு மருதமுனை கலாசார மத்திய நிலையத்தில் சிங்களப் பாட வளவாளர் ஏ.பி.ஆரிபீன் தலைமையில்(25) நடைபெற்றது. இதில் பிரதம அதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராணுவ மேஜர் இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

மொழி என்பது ஒரு தொடர்பாடல் கருவியாகும். இலங்கை நாட்டை பொறுத்தளவில் பல்லின மக்களும் வாழ்கின்ற ஒரு நாடாகும். பல்லின மக்களுக்கும் சேவையாற்றும் தகுதியை ஒவ்வொரு அரச சேவையாளரும் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு இரண்டாம் மொழி தேர்ச்சி என்பது கட்டாயமாகும். பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் எமக்கிருந்த வளங்களை சரியாக பயன்படுத்த தவற விட்டதால் இப்போது கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஒருவருடைய ஆளுமையை, சிறந்த சேவையை தீர்மானிக்கும் சக்தியாக அவரது மொழி ஆற்றல் காணப்படுகிறது. இங்கு அதிகமான ஆசிரியர்களை காணக்கூடியதாக இருக்கிறது. பாடசாலைகளை பொறுத்தளவில் மாணவர்கள் கற்க தொடங்குகிறார்கள் ஆனால் ஆசிரியர்கள் கற்றுக் கொண்டே இருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒரு விடயத்தை கற்று மீண்டும் அதை மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதனால் நாம் ஆசிரியர்களை கற்றுக் கொடுப்பவர்கள் என அழைக்கின்றோம். ஆசிரியர்கள் சிறந்த தேடல் உள்ளவர்களாக, புதிய விடயங்களை தேடி மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். ஆசிரியர்கள் பயன்படுத்துகின்ற மொழி உச்சரிப்பையே மாணவர்களும் கற்றுக் கொள்ளுகிறார்கள். அமைச்சுகள், திணைக்களங்களில் இருந்து வருகின்ற சுற்று நிருபங்கள், கடிதங்கள், அறிக்கைகளை வாசித்து சரியான அர்த்தங்களை புரிந்து கொள்பவர்களாக ஆசிரியர்கள் மாற வேண்டும். அதேபோன்று மாணவர்களுக்கு ஒழுக்கக் கல்வி கட்டாயமானதாகும். சமூகத்தில் எவ்வளவு உயர்ந்த பட்டம் - பதவிகளை பெற்றாலும் அவரிடத்தில் ஒழுக்கம் இல்லையேல் அவர் பெற்ற கல்விக்கும் பட்டங்களும் பயனற்றதாக மாறிவிடுகிறது. இங்கு சிங்கள மொழியை கற்றுக் கொண்ட பலர் திறமையாக தமது மொழி வளத்தினை வெளிப்படுத்தினார்கள். அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இ - பெஸ்ட் கேம்பஸ் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் பி.எம்.ஜவ்பர், வளவாளர்களான எம்.புவாத், திருமதி.எம்.ஜாஹிதா ஜலால்தீன், எம்.ஐ.எம். பாரிஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு தலைமையக போலிஸ் நிலைய போலிசாரின் வருடாந்த அணிவகுப்பு





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொலிசாரின் வருடாந்த அணிவகுப்பு பரிசோதனையும் ஆய்வு அறிக்கை பரிசோதனை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார ஒழுங்கமைப்பில் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான தலைமையில் வெபர் மைதானத்தில் சனிக்கிழமை (24) திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிகாரியாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மா அத்தியட்சகர் யூ. என் பி .லியனகே கலந்து கொண்டு பொலிசாரின் அணிவகுப்பை ஏற்றுக் கொண்டு சோதனையிட்டார்.

அதனை தொடர்ந்து தலைமையக பொலிஸ் நிலையத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட பூங்கா நாடா வெட்டி திறந்துவைத்து பொலிஸ் கொடியை ஏற்றி அங்கு கட்டிடம் மற்றும் பொலிஸ் பிரிவு நிலையங்கள் பரிசோதனை செய்தார்

இதில் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ,பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் நான்கு வருடங்கள் பின்னர் இந்த பொலிசாரின் வருடாந்த அணிவகுப்பு பரிசோதனையும் ஆய்வு அறிக்கை பரிசோதனையும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜாமிஆ நளீமிய்யாவின் போன் விழாவும் பட்டமளிப்பு விழாவும்









**(அஷ்ரப் ஏ சமட்)**

ஜாமிஆ நளீமிய்யாவின் பொன் விழாவும் பட்டமளிப்பு விழாவும் சனிக்கிழமைகொழும்பு பண்டாரநாயக்க சர்வேதச மாநாட்டு மண்டபத்தில் கலாபீடத்தின் தலைவர் அல்ஹாஜ் யாக்கூத் நளீம் தலைமையில் முதலவர் அஸ்ஸெய்க் ஏ.எசி. அஹார் முஹம்மத் மற்றும் இஸ்லாமிய கற்கை நெறியின் தலைவர் அஸ்ஸெய்க் பளீல் ஆகியோரின் வழிநடத்தலில் சிறப்பாக இடம் பெற்றது.

இவ்விழாவின் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாயிஸ் முஸ்தபா மற்றும் கௌரவ அதிதகளாக அமைச்சர் விதுர விகரமநாயக்க இ பாராளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ரஞ்ஜித் பண்டார, ரவுப் ஹக்கீம், இம்தியாஸ் பாக்கீர்மாக்கார், காதர் மஸ்தான், இம்ரான் மஹ்றூப், ஏ.எச்.எம்.பௌசி, மற்றும் ராஜதந்திரிகள்இ வயம்ப பல்கலைக்கழக பேராசிரியர் கே.டி.ரேணுக சில்வா சர்வமத தலைவர்கள்இ மர்ஹூம் நளீம் ஹாஜியாரின் குடும்ப உறுப்பினர்கள், நளீமிய்யாவின் பழைய மாணவர்கள், அரச அதிகாரிகள், தனவந்தர்கள் நலன் விரும்பிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

ஜாமிய்யா நளீமிய்யாவின் தலைவர் அல்ஹாஜ் யாக்கூத் நளீம் தலைமைய உரையை நிகழ்த்தினார். முதல்வர் அஸ்ஸெய்க் ஏ.சி.அஹார் முஹம்மத் ஆரம்ப உரையயை நிகழ்த்தினார் பட்டமளிப்பு விழா உரையை பேராசிரியர் கே.டி.ரேணுக சில்வாவும் விசேட உரைகளை பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர்மாக்கார், ரவுப் ஹக்கீம் ஆகியோரும் உரையாற்றினர்.

இதன்போது ஜாமிய்யா நளீமியாவின் பொன்விழா மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் நளீமியாவின் இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கலாபீடத்தில் கற்கை நெறியை முடித்துக் கொண்ட சுமார் 240 பேர் பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

# பாதயாத்திரீகர்களை மகிழ்வித்த பாலைப்பழமும் வீரைப்பழமும்!

**(வி.ரி.சகாதேவராஜா)**


கதிர்காமத்துக்கு காட்டுப்பாதையில் செல்லும் பாதயாத்திரீகர்களுக்கு இம்முறை நிறைய வீரைப்பழமும் பாலைப்பழமும் கிடைத்து வருகிறது..

உகந்தையிலிருந்து வியாழை போகும் வரைக்கும் பாதையின் இரு மருங்கிலும் நிறைய வீரை மரங்களும் பாலை மரங்களும் பழங்களை சொரிந்தவண்ணம் காணப்படுகின்றன.

பருவகால பழங்களான அவற்றை பாதயாத்திரீகர்கள் மனம் நிறைய உண்டு மகிழ்கிறார்கள்.

சிலர் மரத்தின் மீது ஏறி கிளைகளை உதிர்த்து கீழே வேட்டியை பிடித்து பழுத்த பழங்களை பெற்று உண்டனர்.

பலருக்கு இது புதுமையாகவும் இருந்தது . கடந்த காலத்தை விட இம்முறைதான் காட்டுப்பாதையில் நிறைய பாலைப்பழங்களும் வீரைப் பழங்களும் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது.



பாலைப்பழம் என்பது மிகவும் இனிப்பான ஒருவகைப் பழமாகும். இது இலங்கையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் காடுகளில் வளரும் பாலை மரத்தில் காய்க்கும் பழமாகும். பாலைப்பழம் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே கிடைக்கும். பாலைப்பழம் காய்க்கும் காலத்தை பாலைப்பழம் பருவம் என்றும் அழைப்பர்.

வீரை (Drypetes sepiaria) என்பது இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் காணப்படும் ஓர் மரம். குறுங்காடுகளிலும் மழைக்காடுகளிலும் காணப்படும் இதன் செந்நிறப்பழங்கள் உண்ணக்கூடியவை. இந்த மர உள்ளமைப்பு உறுதியும் நார்த்தன்மையும் கொண்டிருப்பதால் உதிரி உபயோகங்களுக்கும், வேலிக்கும், விறகுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 04

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

*நடப்பது எதுவாகினும்
அது விதிக்கப்பட்டதன் படியே
நடக்கு மென்பதை முற்பகல் செய்யின்
பிற்பகல் விளையும் எனக் கூறிச் சென்றனர்*





**சோலையூர்க் குருபரன்**

இவ்வுலகில் சிலவற்றைக் காணவும் முடியாது, அதனை விபரிக்கவும் முடியாது. இவ்வுலகம் பல மர்மங்களும், மாயங்களும் கொண்டவை. கண்ணால் பார்க்க முடியாத, விளங்கிக் கொள்ள முடியாத அதேவேளை விளக்க முடியாத, கற்பனைகளுக்கு அப்பாற்பட்ட பல மர்மங்களும் உள்ளன. அதனைக் ‘கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்’ எனக் கூறினர். அறிவியல், விஞ்ஞான வளர்ச்சி உச்சத்தைத் தொட்டிருக்கும் இவ்வேளையில் இன்றுவரை ஆய்வுக்கு உட்படுத்தபடாத, ஆய்வு செய்ய முடியாத பல மர்மங்கள் இன்றும் உலகில் உள்ளன. அவற்றுள் பலவற்றை ஆய்வு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகில் இத்தனை மர்மங்கள் இருக்கும்போது நமது வாழ்க்கையிலும் நடத்தையிலும் எத்தனையோ மர்மங்களும் அதிசயங்களும் காணப்படுகின்றன.. நமது உடம்புகூட பல மர்மங்களை உள்ளடக்கிய ஒரு பொக்கிசமாகக் காணப்படுகிறது. எத்தனையோ அதிசயங்கள் இந்த உடம்புக்குள் காணப்படுகின்றன. நமது கண்களில் சுரக்கும் கண்ணீர், காதில் சுரக்கும் திரவம் ஆகியன உலகிலுள்ள ஒவ்வொரு நபருக்கும் வேறுபட்டவை. தனித்துவமானவை. ஒருவருக்குரிய இவை இரண்டின் பண்புகளும் உலகிலுள்ள வேறு எந்த நபருக்கும் இருக்கமுடியாது. இது மிகப் பெரிய அதிசயங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது.

நமது உடம்பில் உயிர் எங்குள்ளது. எவ்வகைப்பட்டது. அதன் தன்மை என்ன என்பதெல்லாம் மர்மங்களாகவே உள்ளன. ஞானிகளும், ஆன்மீகவாதிகளும் அங்கிருக்கிறது. இங்கிருக்கிறது என்ற ஊக அடிப்படையில் கூறி இருக்கின்றார்கவே தவிர அவை ஆய்வு ரீதியாக இன்றுவரை நிரூபிக்கப்படவில்லை. கருவறையில் கரு உருவாகியது முதல் ஒவ்வொரு உறுப்புக்களும் எவ்வாறு உருவாகின்றன என்பதும் வினோதமாகவே உள்ளது. இதற்கு விஞ்ஞானிகள் 23 சோடி நிறமூர்த்தங்களைத் துணைக்குக் கொண்டு வருகின்றனர். இவ்வாறு பல அதிசயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. வேதாந்திகளும் சித்தாந்திகளும் பிறப்பினை கர்ம வினையின் அடிப்படையில் நிகழ்வதாகக் கூறுகின்றனர். முன்னைய கர்ம வினையின் காரணமாக (எழு வினை) அவ்வினை நிறைவடையும்வரை உயிர்கள் பிறப்பெடுப்பதாகக் கன்மம் மறுபிறப்புக் கோட்பாடு விரிவாக விளக்குகின்றது.

உலகின் ஏனைய உயிரினங்களையும்விட மனிதனுக்கு ஆறாவது அறிவாகிய பகுத்தறிவும் உள்ளதனால் தவறுதலாகக் குற்றம் செய்வதையும்விடப் பெரும்பாலும் தெரிந்தே செய்கிறான். பலர் தினமும் பல பஞ்சமகா பாவங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். அப்பாவ வினைகளே மறுபிறப்புக்குக் காரணமாக இருப்பதாகக் கன்மம் மறுபிறப்புக் கோட்பாடு வலியுறுத்துகின்றது. ஒவ்வொரு வினைக்கும் மறு வினை உண்டு எனவும். நாம் செய்த வினைகள் அம்பு போல் நம்மீது பாயும் எனவும் கூறுகின்றது. இதனை இயற்பியல் விஞ்ஞானி சேர்.ஐசாக் நியூட்டன் தனது மூன்றாவது விதியில் ‘எந்தவொரு தாக்கத்துக்கும் நேரானதும் மறையானதுமான பருமனில் சமநிலையான மறுதாக்கம் உண்டு’ எனக் கூறுகின்றார். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது போல் நாம் செய்த வினைகள் ஒவ்வொன்றுக்கும் நேரானதும் எதிரானதுமான மறுதாக்கம் உன்டு என்பதை மறந்து விடலாகாது. உயிரினங்களின் உடலை இயக்குவது உயிர், அந்த உயிருக்குக் காரணமானவன் இறைவன் என்பது உண்மையானால் நாம் உடலுக்குச் செய்வதாகக் கருதிக் கொண்டு செய்யும் தீவினைகள் அந்த உடலை உயிர் மூலமாக இயக்கும் இறைவனையும் சென்றடையுமல்லவா. ஆகவே, உயிர்களுக்கு நாம் செய்யும் எந்தப் பாவச்செயலும் இறைவனையும் சென்றடையும். இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் நாம் எவருக்கும் பாவம் செய்ய மாட்டோம்.

‘மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்துள் மறைந்தது மாமத யானை’ என்பது ஒரு தத்துவார்த்த சிந்தனை. நாம் ஒருவருக்கு எண்ணம், சொல், செயல் என்பவற்றால் செய்யும் நன்மை, தீமைகள் இரண்டையும் அவரின் பெயரைத் தாங்கி நிற்கும் உடலுக்குச் செய்வதாகவே கருதுகின்றோம். இங்கு உயிராகிய இறைவன் மறைக்கப்படுகின்றார். இறைவன் அந்த உடலுக்குள் இருக்கிறான் என்பதை மறைத்தது அவரின் பெயரும் உடலுமாகும். மரத்தினால் செய்யப்பட்ட யானை ஒன்றைப் பார்க்கும் போது யானைதான் நமது கண்களுக்குப் புலப்பட்டதே தவிர மரம் தென்படமாட்டாது. அதேபோல் அதனை மரம் என்று பார்க்கும் போது நமது கண்களுக்கு யானை தென்படுவதில்லை (மரத்துள் மறைந்தது மாமத யானை) என்ற தத்துவம் உணர்த்தப்படுகிறது. ஒன்றின் உண்மையை உணர்வது அவரவர் பார்வையைப் பொறுத்தது.

‘வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்’ என்பது நாம் நல்லது செய்தால் நல்லது கிடைக்கும், தீயது செய்தால் தீயதே கிடைக்கும். வாழ்க்கையில் நாம் எதை விதைக்கிறோமோ அதன் விளைவுகளே நம்மை வந்து சேரும். சில மாதங்களுக்கு முன்னர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் என்னுடன் இரயிலில் பிரயாணம் செய்தபோது அவர் கூறிய உண்மைச் சம்பவம் எனது ஊர் பொலனறுவை. நான் 1981 இல் குருநாகல் கச்சேரியில் எழுதுவிளைஞராகப் பணியாற்றினேன். ஒரு மாதத்துக்கு மாவட்ட சபைத் தேர்தல் பணியாற்றுவதற்காக யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அனுப்பினார்கள். இரயிலில் ஏறிய பின்னர் உள்ளே பல காடையர்கள் இருப்பதைத் தெரிந்து கொண்டேன். அங்கு கடமையாற்றுவதற்காகப் பத்துக்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தரும் ஏறி இருந்தார்கள். இளைஞர்கள் செய்த அட்டகாசம் தாங்க முடியவில்லை. அவர்கள் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மூலமாக அனுப்பி வைக்கப்படடிருக்கிறார்கள் என்பதை அவர்களின் உரையாடலில் இருந்து புரிந்து கொண்டேன். ஏதோ என்னவோ யாழ்ப்பாணத்தில் நடக்கப் போகிறது என்பதை அவர்கள் பேச்சில் இருந்து உணர்ந்து கொள்ள முடிந்தது.

மறுநாள் அதிகாலை யாழ்பாணத்தில் இறங்கியதும் பெரிய மண்டபம் ஒன்றில் தங்க வைத்தார்கள். சிறிது நேரத்தில் அப்போதைய அமைச்சர்களான ரனில் விக்கிரமசிங்கா, காமினி திஸ்ஸநாயக்கா, சிறில் மத்தியூ, பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் வந்து ரவுடிகளை அழைத்து ஏதோ பேசினார்கள். அவர்களை வாகனங்களில் ஏற்றி அனுப்பினார்கள். எங்களுக்கு நியமனக் கடிதங்கள் கொடுத்து, வாகனம் வந்தவுடன் கச்சேரிக்குச் செல்லுமாறு கூறிவிட்டுச் சென்றுவிட்டனர். அன்றிரவு யாழ்ப்பாண நூலகம் காடையர்களால் எரிக்கப்பட்டதை அறிந்தோம். பயத்தின் காரணமாக நானும் இன்னொருவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு வந்துவிட்டோம். நாட்டைப் பாதுகாக்க வேண்டிய அமைச்சர்களே இதனைச் செய்தது வேதனையாக இருந்தது. யாழ்ப்பாண நூலகம் தெற்காசியாவிலே சிறந்த நூலகம் என்றும். 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்று ஆவணங்கள் எரிந்ததாகவும் கேள்விப்பட்டு வேதனை அடைந்தேன். அன்று ரணில் செய்த வினைக்குப் பதலீடாகவே அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களால் 09-07-2022 ஆந் திகதி அவரின் வீடு எரிக்கப்பட்டபோது அவரின் நூலகத்தில் இருந்த 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெறுமதி வாய்ந்த நூல்கள், ஆவணங்கள் எரிக்கப்பட்டதாகக் கூறி சிங்கள மொழியில் ‘முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’ என்ற முது மொழிக்கு நிகரான வாக்கியமொன்றை ஆதாரமாக எடுத்துக் கூறி வேதனைப்பட்டுக் கொணடார்.

நாம் எதை வெறுக்கிறோமோ அது வேகமாக நம்மை விட்டுச் சென்றுவிடும். மோட்டார் சைக்கிள் ஒன்று நம்மிடம் இருக்கிறது. அது பழையதாகிவிட்டது. இப்போது பிள்ளைகள் அதனை வெறுக்கின்றனர். புதியதொன்று கொள்வனவு செய்யுமாறு கூறுகின்றனர். இப்போது தந்தைக்கும் மனமாற்றம் ஏற்படுகிறது. அதனால் எல்லோருமாக அந்த வாகனத்தை வெறுக்கின்றனர். எல்லோர் மத்தியிலும் வேண்டாப் பொருளாக மாறிவிட்டது. அதனால் அந்த சைக்கிள் அடிக்கடி தொல்லை கொடுக்க ஆரம்பித்தது. இதன் மூலம் ‘நீ எதை நினைக்கிறாயோ அது போலவே ஆகுகிறாய்’ என்பதும், எண்ணமே வாழ்வு என்புதும் உணர்த்தப்படுகின்றன.

மனைவி தனது கணவனை வேண்டா வெறுப்போடு நடத்துவார். அவரைக் கணக்கில் எடுப்பதுமில்லை. ‘அழிந்து போ’ ‘எங்கேயாவது போய் செத்துப் போ’ என்றெல்லாம். தினமும் திட்டுவார். நோயாளியாக இல்லாதிருந்த அவர் திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். இப்போது அவர் மனைவி கணவனின் இழப்பினையும், அவர் வீட்டில் ஆற்றிய பணியினையும் நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஒருவர் வாழும்போது அவரின் பெருமையை விளங்கிக் கொள்வதில்லை. காலம் கடந்தபின் ‘சுடலை ஞானம்’ வந்து என்ன பிரயோசனம். இவ்வாறுதான் தனது மனைவியை எந்தநாளும் திட்டிக் கொண்டிருப்பார். சில வேளைகளில் மிக மோசமாகவும் திட்டுவார். இப்போது மனைவி நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகிவிட்டார். கணவன் தான் செய்த தவறை எண்ணி மனைவிக்குப் பணிவைடை செய்து கொண்டிருக்கிறார். இன்னுமொரு நபர் திருமணம் செய்வதாகக் காதலித்து அவர்கள் இருவரும் பிறந்த திகதி பொருந்தாது எனக் கூறி வேறு திருமணம் செய்து இரு பிள்ளைகளுக்கும் தந்தையாகிவிட்டார். அவரின் இரு பிள்ளைகளும் அவர் மோசமான திகதி எனக் காரணம் காட்டி வெறுத்த இரு திகதிகளிலும் பிள்ளைகள் பிறந்திருக்கின்றனர். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது அவருக்கு நடந்திருக்கின்றன.

நாம் செய்த தீவினைக்குரிய பலன் ஏதோ ஒரு வகையில் எமக்குக் கிடைத்திருக்கும். அதனை நாம் உணர்ந்து கொள்வதில்லை. ‘கண் கெட்ட பின்னர்தான் சூரிய நமஸ்காரம்’ என்பது போல் நமக்கென்று வந்த போதுதான் அவற்றை உணர்ந்து பார்க்கிறோம். இந்த உண்மையைப் புராண, இதிகாசங்கள், காவியங்கள், காப்பியங்கள், நீதி நூல்கள் ஆகியன உணர்த்தி இருக்கின்றன. முன்பு இராவணன் திருமகள்மீது காமம் கொண்டு திருமகளை அடைய முயற்சி செய்த வினையே சீதை இராவணன் மகளாகப் பிறப்பதற்கும், இலங்கை உட்பட அவனின் வம்சம் அழிவதற்கும் காரணமாக அமைந்ததென வால்மீகி இராமாயணம் கூறுகிறது. துரோணர் சிகண்டி காரணமாக இறப்பதற்கும், திருதராட்டினனின் (கௌரவர்கள்) நூறு பேர் இறப்பதற்கும், சகுனி கௌரவர்களைப் பழி வங்கியதற்கும் பாண்டவர்கள் ஐவரின் புதல்வர்கள் கொல்லப்பட்டமைக்கும் ஊழ்வினை காரணமாக அமைந்ததென மகாபாரதக் கதை கூறுகின்றது, இவ்வாறு கதைகள், உப கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் என்பவற்றின் மூலமாக முற்பிறப்பு, மறுபிறப்பு என்பன தெளிவுபடுத்தப்பட்டு இருக்கின்றன. இந்த உண்மைகளைத் தெரிந்து அதன்படி நடப்பதற்கு நமது பிடிவாதம், வரட்டுத்தனம், கோபம், அகங்காரம். கர்வம் ஆகியன கொண்ட ஆணவ மலம் இடம் கொடுப்பதில்லை. இதனை மாயை எனப்படும் அறியாமை உண்மையை மறைத்து கர்ம வினைகளைச் செய்து கொண்டிருப்பதாக வேதாந்தம், சைவ சித்தாந்தம், திருமுறைகள் ஆகியன விரிவாக விபரிக்கின்றன.

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் ‘அறம் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்’ ‘உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவதும்’ ‘ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்’ என்ற மூன்று அறவழிச் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டே கதை நகர்த்திச் செல்வப்பட்ருக்கிறது. கோவன் கொலை, பாண்டிய மன்னன் இறந்தமை, மதுரை மாநகரம் தீயிட்டு அழிக்கப்பட்டமை ஆகிய சம்பவங்கள் யாவும் மேலுள்ள மூன்று கருத்தியலையும் அடிப்படையாகக் கொண்டவை. பாண்டிய மன்னன், கோவலன், கண்ணகி, பொற்கொல்லன் ஆகியோரின் வாழ்க்கை முற்பிறவியில் நடந்த சம்பவங்களோடு தொடர்புபட்டவை. அவர்கள் முற்பிறவியில் செய்த வினைகளின் காரணமாக இப்பிறவியில் தண்டனை அனுபவித்தார்கள் என்ற உன்மை மதுராபதித் தெய்வத்தின் ஊடாக வெளிக் கொணரப்பட்டது. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் இச்சம்பவங்களைத் தொடர்புபடுத்திக் கதையைச் சிறப்பாக நகர்த்திச் சென்றிருக்கிறார்.

இலங்கையில் நடந்த முப்பது ஆண்டுகால யுத்தத்தின் போதும், இறுதி யுத்தத்தின் போதும் எதிலும் சம்பந்தப்படாத பல்லாயிரக் கணக்கான அப்பாவிப் பொது மக்கள் தடை செய்யப்பட்ட குண்டுத் தாக்குதலால் கொல்லப்பட்டனர். சிறு குழந்தை முதல் முதியோர்வரை பொஸ்பரஸ், கொத்தணிக் குண்டுத் தாக்குதலுக்கு உட்பட்டு சாம்பலாகிக் கருகிக் கிடந்தனர். இதனைக் ஹெலிக்கொப்டரில் தாளப்பறந்து பார்வையிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பிரதம செயலாளர் கோபி அனான் கூறுகையில் இப்படிப்பட்ட கோர யுத்த அழிவுகளை எனது வாழ்வில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பில் மிக வருத்தததுடன் கூறி இருந்தார். இந்த அகோர யுத்தத்தில் இறந்த ஆத்மாக்கள் என்றைக்கோ ஒரு நாள் சம்பந்தப்பட்டவர்களைப் பழிவாங்கியே தீரும். இப்போது ராஜபக்ச குடும்பத்தினரும் இன்னும் பலரும் பழிவாங்கப் பட்டிருக்கிறார்கள் எனப் பலரும் கூறுகின்றனர். இதற்குப் பெரும்பான்மை மக்களில் பலர் சம்பந்தப்பட்டிருந்தமையால் ஒட்டு மொத்த நாடும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது எனவும் மக்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு காரண, காரியங்களின் அடிப்படையில் ஒவ்வொரு செயற்பாடும் உலகில் நடந்து கொண்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த ஒருவர் நான் அறிந்தவரை யாருக்கும் தீமை செய்ததாக ளேவிப்படவில்லை. எவருடனும் உரையாடும்போது நல்லது, நல்லது எனவே கூறுவார். யாருடனும் எதிர்மறையாகப் பேசமாடடார். இந்த நல்வினையின் பலன் அவருடைய பிள்ளைகள் மூன்று பேரும் மிக உயர் பதவிகளில் இருக்கின்றனர்.

‘மக்கள் சேவை மகேசன் சேவை’ ‘பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்’ என்பதற்கிணங்க ஒருவர் அல்லும் பகலும் சமூக சேவையில் ஈடுபட்டு பலரின் வாழ்க்கைத்தர உயர்வுக்கும், கல்வி உயர்வுக்கும் காரணமாக இருந்தார். அதனால் அவருக்குப் பலரின் பாராட்டும் வாழ்த்தும், ஆசியும் கிடைத்ததன. இந்த ஆசியும், வாழ்த்தும், பாராட்டும் அவரது பிள்ளைகளின் வாழ்வை உயர்தியது. இப்போது அவருடைய நான்கு பிள்ளைகளும் கௌரவத்தோடு மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள். இதைத்தான் வள்ளுவரும் ‘காலத்தினால் செய்த உதவி ஞாலத்தின் மானப் பெரிது’ என்றார் போலும். இத்தகைய நற்செயல்களில் ஈடுபட்டவர்கள் வாழ்க்கையில் சில துன்பங்களை அனுபவித்தாலும் பிற்பட்ட காலத்தில் எல்லோரும் மெச்சும்படியாக சந்தோசம், மகிழ்ச்சி, நிம்மதி, மனநிறைவோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மாணவர்கள் பல தியாகங்களைச் செய்து படிக்காமல் பரீட்சையில் சித்தியடைய முடியாது. தொழில் முயற்சியாளன் தனது முயற்சியில் முழு ஈடுபாடு காட்டாமல் இலாபத்தை உழைக்க முடியாது. விவசாயி தனது பயிரை நன்கு பராமரிக்காமல் விழைச்சலைக் கூட்ட முடியாது. வியாபாரி தனது முயற்சியில் அக்கறையின்றி இருந்தால் வியாபாரத்தைக் கொண்டு நடத்த முடியாது. இவ்வாறுதான் நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்குமுரிய பயன் நம்மை வந்து சேருகின்றன. உழைப்புக்குரிய பலன் என்றோ ஒருநாள் நம்மை வந்தடையும். இதைத்தான் ‘முற்பகல் செய்யின் பிறபகல் விழையும்’ என்றார்கள்.

*வாழ்வு பொன்னானது புனிதமானது என
வாழ்வில் எதிர் கொள்ளும் மூட நம்பிக்கைகளை
பக்குவமாய்க் களைந்திடப்
விவேகத்துடன் செயற்படுவோம்*

**பணி தொடரும்..**





# மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமா?
# ரஷ்ய அதிபர் புட்டின் ஆட்சி கவிழுமா?
# வாக்னர்ஆயுதக் குழு பின்புலம் என்ன?

**(மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமற்றதாகவும், ரஷ்ய அதிபர் புட்டினுக்கு ஏற்பட்ட நெருக்கடி தற்காலிகமானதாகவே தென்படுவதாக மாஸ்கோ ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். போரின் திருப்பு முனையாக உள்ளக சதி மூலம் அதிபர் புட்டினை வீழத்த மேற்குலகும்-அமெரிக்காவும் முயல்கின்றன. இதற்கு ஒத்து ஊதும் வண்ணம் மேற்கத்தய ஊடகங்கள் பல கற்பனைக் கதைகளை பரப்புவது சகஜம்)**



உலகம் முழுவதும் ஒரே ஒரு விஷயம் நேற்று சனிக்கிழமை காலை முதல் பரபரப்பான பேசுபொருளாக ஊடகங்களில், குறிப்பாக மேற்குலக ஊடகங்களில் அமைந்தது.

உண்மையில் இன்றைய ஊடகங்களில் அமையும் முக்கிய விடயம் ரஷ்யா தான். ஏற்கெனவே உக்ரைன் மீதான தாக்குதலின் காரணமாக ஒன்றரை ஆண்டுகளாக செய்திகளில் இருந்து கொண்டுதானே இருக்கிறது என எண்ணலாம். ரஷ்யா ஆம், இன்னமும் நெருக்கடியில்தான் இருக்கிறது.

மேற்குலக எண்ணத்தின் படி எப்படி முன்பு எப்படி சோவியத் ஒன்றியம் உடைக்கப்பட்டதோ, அதே பாணியில் இப்போது ரஷ்யாவை சிதைக்கும் திட்டத்தில் மேற்குலக ஊடகங்கள் முனைப்பாக உள்ளன.

### ரஷ்யாவில ஆட்சி கவிழ்ப்பு வரலாறு:

சோவியத் சிதைவின் பின்னர் இரண்டு முறை ஆட்சி கவிழ்ப்பை சந்தித்தது ரஷ்யா. ஆயினும் தற்போதய பிணக்குகள் பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ உடன் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக கூறியதைத் தொடர்ந்து, உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக தனது படைகள் வெளியேறுவதாக வாக்னர் குழு தலைவர் தெரிவித்தார். இதனால் ஆயுத கிளர்ச்சி முடிவுக்கு வரவிருக்கிறது. வந்தும் விட்டதாக மாஸ்கோ தகவல்கள் கூறுகின்றன.

1991-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சோவியத் ரஷியா உடைவதற்கு முன், கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் ரஷியா உருவாவதற்கு முக்கிய பங்கு வகித்த 15 குடியரசுகளுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கும் அதிகார ஒப்பந்தத்தை தடுத்து அதிகாரத்தை கைப்பற்ற நினைத்த சதி முறியடிக்கப்பட்டது.

அதன்பின் இரண்டு வருடங்கள் கழித்து 1993-ம் ஆண்டு செப்டம்பர் 21-ந்தேதி முதல் அக்டோபர் 4-ந்தேதி வரை பாராளுமன்ற கிளர்ச்சி ஒன்றும் ஏற்பட்டது.

### மேற்கத்திய ஊடக பிரச்சாரம்:

ரஷ்ய விரோதப்போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் ஊறி அது பரவி முழுமையாய் ஊறிப்போயுள்ளது. அதற்கு நேர் மாறாக அமெரிக்கா ஏதோ உலகிற்கு விடுதலை வாங்கித்தர வந்த மீட்பர்கள் போலவும் பல மேற்குலக ஊடகங்களும் தொடர்ந்து பல ஆண்டுகளாக பிரச்சாரம் செய்து வருவதையும் பார்க்கிறோம்.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கிய போர் இன்றும் நீடித்துவருகிறது. இந்தப் போரில் ரஷ்யா தொடர்ந்து மெதுவாக முன்னேறி வருவதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலையில், தங்களைத் தனியார் ராணுவம் என அழைத்துக்கொள்ளும் 'வாக்னர் குழு' ரஷ்யாவுக்கு தலைவலியாக தற்போது மாறியிருக்கிறது என பல தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த வாக்னர் குழு கூலிப்படையாகவே மேற்குலக ஊடகங்களில் அறியப்படுகிறது. தற்போது ரஷ்யாவிற்கு மேலும் ஒரு நெருக்கடி கொடுத்து மீண்டும் புதிய கோணத்தில் பேசுபொருளாக்கியுள்ளது இந்த வாக்னர்ஆயுதக் குழு.

### வாக்னர் ஆயுதக் குழு பின்புலம்:

உக்ரைன், நோட்டா அமைப்புடன் இணைவது ரஷ்யாவுக்கு அச்சுறுத்தல் என ரஷ்யா எச்சரித்தும்,

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உக்ரைன் நோட்டாவுடன் இணைவதில் உறுதியாக இருந்தது. இதனால், ரஷ்யா உக்ரைனுக்கு எதிரான போரைத் தொடங்கியது.

இப்போரில் வாக்னர் ஆயுதக் குழு உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ராணுவத் தாக்குதலின்போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. குறிப்பாக, கிழக்கு உக்ரைனின் பக்முத் பகுதி கைப்பற்றப்பட்டதில் வாக்னர் ஆயுதக் குழுவின் செயல்பாடுகளுக்கு அதிபர் புட்டினே பாராட்டுகளைத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய அதிபர் புட்டினுக்கு புதிய நெருக்கடியாக வலம் வரும் வாக்னர் ஆயுதக் குழுவின் ஏன் இன்றைய நெருக்கடிகளுக்கு தள்ளப்பட்டதன் பின்புலம் என்ன என்பதை இலகுவாக கணிக்க முடியாது.

தற்போது தமது 25,000 வீரர்கள் இறப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என ரஷ்யாவுக்குச் சவால்விடுவதாக வாக்னர் குழு பற்றி ஐரோப்பிய ஊடகங்களில் பரவலான தகவல்கள் வெளிவருகின்றன.

### யாரிந்த யெவ்ஜெனி பிரிகோஸின்:

இந்தக் குழு புட்டினின் தனிப்பட்ட ராணுவம் என்றும் கூட விமர்சனத்துக்குள்ளானது. உக்ரைன்-ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்காக வாக்னர் குழு சுமார் 30,000 பேரை பலி கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. உக்ரைனின் பெரும்பகுதிகளை வாக்னர் குழுதான் கைப்பற்றி ரஷ்யாவிடம் ஒப்படைத்ததாகவும் தகவல்கள் முன்பு வெளியாகின.

வாக்னர் ஆயுதக் குழு என்பது ரஷ்யாவில் இயங்கிவரும் தனியார் ராணுவ ஒப்பந்த அமைப்பாகும். இது ஒருவித ஒப்பந்த படை என்றும் கூறலாம். ஏனெனில், ரஷ்யா மட்டுமல்லாது லிபியா, மாலி, சிரியா எனப் பல பகுதிகளிலும் உள்நாட்டுப் போரில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்தக் குழுவினர் இயங்குகின்றனர்.

ஆனால், உலகம் முழுவதும் இந்தக் குழு சட்டத்துக்கு அப்பாற்பட்டே செயல்படுகிறது என மற்றய நாடுகள் தெரிவிக்கின்றன. ரஷ்யாவிலும் தனியார் ராணுவ ஒப்பந்தக்காரர்கள் சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், மறைமுகமாக அதிபர் புட்டினின் ஆதரவோடு, ராணுவத்தின் சம்மதத்தோடு தேவைப்படும்போது இந்தக் குழு இயக்கிக் கொள்ளப்படுகிறது என்பது வெளிப்படை.

முன்னாள் ரஷ்ய அதிகாரி டிமிட்ரி உக்டின் மற்றும் யெவ்ஜெனி பிரிகோஸின் என்ற புட்டினின் முன்னாள் தலைமை நிபுணரும் இணைந்து 2014-ல் இந்தப் படையை உருவாக்கினர். ஒரு மூர்க்கத்தனமான ஆயுதக் குழு என்றும், பக்முத்தில் வாக்னர் குழுவை இறக்கி தங்கள் படைகளுக்கு பெரும் சேதத்தை ரஷ்யா ஏற்படுத்தியதாக உக்ரைன் குற்றஞ்சாட்டி இருந்தது.

இவ்வாறாக இவர்களின் படைகள் உக்ரைன் மீதான தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்டது. இப்போது நடக்கும் போர் தொடங்குவதற்கு முன்னரே 2014 தொட்டு உக்ரைனில் அவ்வப்போது சிறு தாக்குதல்களை இவர்கள் நடத்தினர். குறிப்பாக, கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் போரில் 'தி வாக்னர்' ஆயுதக் குழு பெரும் பங்காற்றியது.

2015-ல் தொடங்கி இந்த ஆயுதக் குழு சிரியா, லிபியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் உள்நாட்டுக் கிளர்ச்சிகளில் அரசுக்கு ஆதரவாகப் பணியாற்றியுள்ளது. அதேபோல் சிரியாவின் தங்கச் சுரங்கங்களைப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது என்பது அறிந்ததே.

### மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமா ?

மாஸ்கோவை விட்டு தனி விமானத்தில் அதிபர் புட்டின் வெளியேறினார் என்றும், ரஷ்ய ராணுவத்துடன் மோதத் துணிந்துள்ள வாக்னர் படையினர் மாஸ்கோ நோக்கி அணிவகுப்பதால் உள்நாட்டுப் போர் வெடிக்குமோ என்று அந்நாட்டு மக்கள் உச்சக்கட்ட பதற்றத்தில் இருக்கிறதாக அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய ஊடகங்கள் பரவலாக பிரச்சாரப் பாணியில் செய்திகளை வெளியிடுகின்றனர்.

அத்துடன் ரஷ்ய அதிபர் புட்டின் சிறப்பு விமானத்தில் தலைநகர் மாஸ்கோவை விட்டு வெளியேறிவிட்டதாக சமூக வலைதளங்களில் பலரும் பதிவிட்டு வருகின்றனர்.ரஷ்யாவில் அதிபர் புட்டினுக்கான சிறப்பு விமானமான ஐடு-96-300கக் விமானம் மாஸ்கோவில் இருந்து, அங்குள்ள நேரப்படி பிற்பகல் 2.16 மணியளவில் புறப்பட்டு வடமேற்குத் திசையில் சென்றுவிட்டதாக விமானங்களின் பாதையை பின்தொடரும் FlightRadar சேவை தரவுகளை சுட்டிக்காட்டி சிலர் பதிவிட்டுள்ளனர். இவை எல்லாம் சோடிக்கப்பட்ட செய்திகள் என மாஸ்கோ தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாஸ்கோவுக்கு வடமேற்கே உள்ள த்வெர் (Tver) நகருக்கு அருகே, புட்டின் பயணித்த சிறப்பு விமானம் அந்த கண்காணிப்பு கட்டமைப்பில் இருந்து மறைந்துவிட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், அந்த சிறப்பு விமானத்தில் புதின் இருந்தாரா என்பதை உறுதிப்படுத்த எந்த ஆதாரமும் இல்லை.

அத்துடன் புட்டின் தலைநகர் மாஸ்கோவில் நிரந்தரமாக வசிப்பதில்லை, மாஸ்கோவுக்கு வடமேற்கே அமைந்துள்ள வால்டாய் ஏரியில் உள்ள தனது பரந்து விரிந்த இல்லத்தில் அதிக நேரத்தை செலவிடுவார் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

### புட்டினுக்கு எதிராக சதியா?

முதுகில் குத்தும் செயல் என்று புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார். ரஷ்யாவின் ராணுவத் தலைமைக்கு எதிராக வாக்னர் குழு போர்க்கொடி தூக்கிய பிறகு முதன் முறையாக ரஷ்ய அதிபர் புட்டின் பத்திரிகையாளர்களை சந்தித்துள்ளார்.

ரஷ்ய மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில், அனைத்து படைகளும் ஒருங்கிணைந்து இருக்க கேட்டுக் கொண்டுள்ளார். நடந்த நிகழ்வுகள் 'ஒரு துரோகம்' என்றும் ரஷ்ய மக்களை முதுகில் குத்தும் செயல் என்றும் அவர் சாடியுள்ளார். இது முதுகில் குத்தும் செயல். இந்த மாதிரியான அச்சுறுத்தல்களில் இருந்து தேசத்தைக் காப்பதற்கான எங்களது நடவடிக்கை தீவிரமானதாக இருக்கும். துரோகப் பாதையில் இறங்கி தீவிரவாதத்தை கையில் எடுத்தவர்கள், நிச்சயம் தண்டனையை அனுபவிப்பார்கள். சட்டத்திற்கும் நாட்டு மக்களுக்கும் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவை அச்சுறுத்தும் இந்த மோசமான சூழலில் ரஷ்ய அரசு தரப்போ, வாக்னர் கூலிப்படை தலைவர் யெவ்ஜெனி பிரிகோஸினோ தங்களது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க தயாராக இருப்பதாக தற்போது தெரியவில்லை.

### புதினுக்கு நேரடி சவால் பிரிகோஸின்?

புட்டினின் தொலைக்காட்சி உரைக்கு பதிலளித்துள்ள வாக்னர் தலைவர் யெவ்ஜெனி பிரிகோஸின் தனது நிலைப்பாட்டில் முதலில் உறுதி காட்டினார். தற்போது பெலரூஸ் நாட்டு நடுநிலமையுடன் தற்போதய சிக்கல்களை பேசித்தீர்க்க முடிவெடுத்து உள்ளார.

ரஷ்ய அதிபர் புட்டினுக்கு எதிராக முறையாக நேரடியாக பிரிகோஸின் விடுக்கும் சவால் இது என்று நம்பப்படுகிறது. மிகவும் நெருக்கமான, அவருக்கு விசுவாசமான சகாவாக வலம் வந்த பிரிகோஸின், ரஷ்ய அதிபர் மாளிகையான கிரெம்ளின் சமையல் ஒப்பந்தங்களை பெற்றதன் மூலம் 'புதினின் சமையல்காரர்' என்று வர்ணிக்கப்பட்டவர்.

இந்நிலையில், அதிபர் புட்டினின் ஆதரவோடு வளர்க்கப்பட்ட வாக்னர் குழு இன்று அவருக்கு எதிராகவே திரும்பியுள்ளது எனக் கூறப்பட்டாலும் மாஸ்கோவில் ஆட்சி மாற்றமோ 'அல்லது புட்டினை வீழ்த்துவது அரிதே என ஊகிக்கப்படுகிறது.

தற்போதய சிக்கலின் பின்னணி என்னவென்று பார்த்தால் ,உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் முறியடிப்பின் பின்னரே ஊடகங்களின் போராக வாக்னர் குழு பற்றிய தகவல்கள் வந்துள்ளன.

கடந்த வாரம் உக்ரேனிய போர் நிலவரத்தில், ரஷ்யாவின் நட்பு நாடான பெலாரசில்அணு ஆயுதங்களை நிலைநிறுத்தப்போவதாக ரஷ்ய அதிபர் புட்டின்தெரிவித்துள்ளதுடன், அதேவேளை மேற்குலக படைபல ஆதரவுடன் உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் ரஷ்யாவால் முறியடிக்கப்பட்டுள்ளதை மேற்குலக ஊடகங்கள் உறுதிப்படுத்தி உள்ளன.

உக்ரேனின் வலிந்த எதிர்த்தாக்குதல் முயற்சியின் போது ரஷ்ய படைகளின் முறியடிப்புத் தாக்குதல்களால் பல உக்ரேனிய தாங்கிகள் அழிக்கப்பட்டதைக் காட்டும் வீடியோப் பதிவுகள் மேற்கத்திய ஊடகங்களிலும் வெளியாகி உள்ளன.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக வீடியோவை முழுமையாக ஆதாரப்படுத்தி ஏற்காவிட்டாலும், உக்ரேனின் 186 டாங்கிகள், 418 கவச வாகனங்கள் இழந்ததை கீவ் தலைநகரம் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

### 33 நாடுகளில் உக்ரைனிய வீரர்களுக்கு பயிற்சி:

கடந்த வருடம் பிப்ரவரி 24, 2022 அன்று, ரஷ்யா உக்ரைனில் ஒரு சிறப்பு இராணுவ நடவடிக்கையின் பின், டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசுகள் உக்ரேனிய படைகளின் கோரமான தாக்குதல்களின் கீழ் வாழ்ந்து வந்த டான்பாஸ் பிராந்தியத்தை விடுவிக்கும் நோக்கில் ரஷ்யாவின் சிறப்பு நடவடிக்கை ஆரம்பமாகியது.

ரஷ்யா எல்லையில் உக்ரைன் கடந்த சில நாட்களாக உக்ரைன் வலிந்த எதிர் தாக்குதலை (Counter offensive) நடத்தியது. அதில் ரஷ்யா கைப்பற்றிய சில கிராமங்களை மீட்டுள்ளதாக முதலில் தகவல் வெளியிட்டனர்.

ஆயினும் ரஷ்யாவின் எதிர் தாக்குதலால் இப்போரில் உக்ரைனுக்கு இழப்பு அதிகம் என கூறப்பட்டுள்ளது. ஆக மொத்தமாக போரின் திருப்பு முனையாக உள்ளக சதி மூலம் அதிபர் புட்டினை வீழத்த மேற்குலகும்-அமெரிக்காவும் முயல்கின்றன. இதற்கு ஒத்து ஊதும் வண்ணம் மேற்கத்தய ஊடகங்கள் பல கற்பனைக் கதைகளை பரப்புவது சகஜம்.

ஆயினும் மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமற்றதாகவும், ரஷ்ய அதிபர் புட்டினுக்கு ஏற்பட்ட நெருக்கடி தற்காலிகமானதாகவே தென்படுவதாக மாஸ்கோ ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.





# மூன்றாவது கண்.!

**பேராசிரியர் சி.மௌனகுருவின் அமுத விழாவை அடுத்து சில வட்டாரங்களில் எழுந்துள்ள சில கருத்தாடல்கள் பற்றிய அழகு குணசீலனின் பார்வை இது. மௌனகுரு அவர்களை பற்றியது மட்டுமல்ல இது. கூத்து பற்றியதும்.**

**கூத்தே உயிராய்!**

---------

**கூத்தின் உயிராய்!!**

----------

**(மௌன உடைவுகள் - 32)**

மட்டக்களப்பில் இப்படி ஒரு பேச்சு வழக்கு இருக்கிறது. ஒரு விடயத்திற்காக அடம்பிடிக்கும் மற்றவர்களை பார்த்து சொல்லும் பேச்சு வழக்கு இது. இவ புதுனம் தான் காட்டுறா அல்லது இவரு என்ன கூத்துக்காட்டுறாரு. என்று சாதாரணமாக கிராமிய மக்கள் பேசுகின்ற அளவுக்கு கிராமிய வாழ்வியலில் பின்னிப்பிணைந்த ஒன்றாக உள்ளது நாட்டுக்கூத்து.

யாழ்ப்பாணத்தில் உயர்குடி திருமணப்பேச்சுக்களில் பெண்ணின் தகுதியை பரதநாட்டியம், கர்நாடகசங்கீத அறிவைக் கொண்டு எடைபோட்ட காலம் ஒன்று இருந்தது. இது சாதாரண குடிகளில் சமையல், தையல் அறிவாக தராசில் வைக்கப்பட்டது. மட்டக்களப்பில் வடமோடி,தென்மோடி கூத்து அரங்கேற்றங்களைத் தொடர்ந்து கூத்தர்களை மாப்பிள்ளை கேட்டுப்போகும் வழக்கம் இருந்தது. திருமணங்கள் இடம்பெற்றன.

இந்த வரலாற்று போக்கில் பேராசிரியர் சி. மௌனகுருவின் எண்பதாவது வயதை அமுதவிழாவாக அவரின் மாணவர்கள், சக கூத்துத்துறை சார்ந்த நண்பர்கள், கிழக்குப் பல்கலைக்கழக- விபுலாநந்த அழகியற்கற்கைகள் நிறுவகம், கலை இலக்கிய, பண்பாட்டு ஆர்வலர்கள், அறிஞர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள் என பலதரப்பினரும் இணைந்து கொண்டாடி இருக்கிறார்கள் .

இந்த அமுதவிழாவைத்தொடர்ந்து சில எதிரொலிகள் அங்காங்கே சமூக ஊடகங்களில் உலாவருகின்றன. இவற்றில் சில வெளிப்படைத் தன்மையற்ற மறைமுக மொழியில் பதிவிடப்பட்டவை. இவை பொதுவாக மூன்று விடயங்கள் குறித்தவையாக இருப்பதை காண முடிகிறது. இந்த எதிரொலிகளில் சில கூத்துக்காட்டுறாரு . பாணியையும் நினைவூட்டத்தவறவில்லை.

1. கூத்து இவர்களுக்கு மட்டுமா சொந்தம் என்ற கேள்வி எதிரொலிக்கிறது.

2. நாட்டுக்கூத்தா .? ஈழக்கூத்தா..? இரண்டும் கெட்டால் எப்படி அழைப்பது? என்பது இன்னொரு வினா.★

3. பேராசிரியர் சு.வித்தியானந்தன் நாட்டுக்கூத்து என்று அழைத்ததற்கு அவரது மட்டக்களப்பு மாணவர்கள் காரணமாக இருக்கலாம் என்றும் அவரின் மட்டக்களப்பு மாணவர்கள் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். என்றும் கருத்துப்பதிவுகள் இடம் பெற்றுள்ளன. ★

## (★) கூத்து இவர்களுக்கு மட்டுமா சொந்தம்!

சமூக , பொருளாதார, அரசியல் தனித்துவங்கள் ஒரு நாட்டிற்கோ, பிரதேசத்திற்கோ சொந்தமானவையாக அமைகின்றன. இவை அந்த மக்களின் தனித்துவமான சமூக வாழ்வியலை நிர்ணயிக்கின்றன, பிரதிபலிக்கின்றன. மக்களின் வாழ்வியல் கண்ணாடியாக உள்ள கலை, இலக்கிய பண்பாட்டுக்கோலங்களும் இதற்கு விதி விலக்கானவை அல்ல. இவை ஒரு சமூகத்தின் முகமாக தம்மை அடையாளப்படுத்தி நிற்பவை. இவை ஒரு சமூகத்தின் பொதுச்சொத்து- பொதுவுடமை . இதற்கு ஒரு குழுவோ அல்லது தனிநபர்களோ எவ்வாறு சொந்தம் கொண்டாட முடியும்? அதைப் புரிந்து கொண்டால் இந்த கேள்வி எழுவதற்கு வாய்ப்பில்லை.

கிழக்கின் - மட்டக்களப்பின் பொருளாதார பண்பாட்டு வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாதது வேளாண்மை. வேளாண்மை வயல் வாடிகளில் சாமானிய விவசாயிகளால் வேளாண்மை விதைப்புக்கும், வேளாண்மை வெட்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பொழுது போக்குக்காக ஆடப்பட்ட நாட்டுக்கூத்தை பல்கலைக்கழக அங்கீகாரம் பெறும் வகையில் , ஆய்வுப் பொருளாக்கி கல்விச் சமூகம் வியக்கும் வகையில் மற்றைய உயர்குடி கலைகளுக்கு சமமாக உயர்த்தும் பணியை ஆரம்பித்து வைத்தவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

அவரின் ஒரு மாணவனாக, சீடனாக, வாரிசாக தனது வாழ்நாளில் கூத்தை வரிந்து கட்டிக்கொண்டவர் பேராசிரியர் சி.மௌனகுரு. ஒரு காலத்தில் படுவான்கரையானின் - பட்டிக்காட்டானின் படிக்காத பாமரனின் கலை என்றும் இழிசனர் கலை என்றும் முத்திரை குத்தப்பட்ட கூத்துக்கலையை இன்றைய உச்சத்திற்கு கொண்டு வந்ததில் வைக்கப்படும் விமர்சனங்களுக்கும் அப்பால் பேராசிரியர் சி. மௌனகுரு முதன்மையானவர்.

வயல், குளவெளிகளில் களரியில் அரங்கேற்றப்பட்ட இந்த பாரம்பரிய கலைவடிவத்தை நவீன நாடக அரங்கிற்கு அறிமுகம் செய்ததில், புதிய யுக்திகளையும், நவீனங்களையும், வாத்தியங்கள், ஆடை அலங்காரங்களையும் மேடைக்கு ஏற்ப உள்வாங்கியதில் அமுதவிழா நாயகன், பெருங்கூத்தன் பேராசிரியர் சி.மௌனகுருவை விடவும் வேறு எவரினதும் பெயரை உச்சரிக்க முடியாது.


மரபு ரீதியான இந்த அம்சங்களில் கூத்துமீளுருவாக்கம் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் பெரும்பாலும் கூத்தின் புறநிலை தோற்றத்தில் ஏற்படுத்தப்பட்டவை. இதற்கு சமாந்தரமாக கூத்தின் அகநிலையிலும் மாற்றங்கள் தேவை. இந்த அகநிலையில் மாற்றங்கள் ஏற்படும்போதே தமிழ் இலக்கிய திறனாய்வுத்துறையில் பேராசிரியர்கள் கைலாசபதியும், சிவத்தம்பியும் செய்த கட்டுடைப்பை கூத்துக்கலையிலும் காணமுடியும். இந்த வகையில் இந்த மீளுருவாக்கம் ஒரு புறநிலை தோற்றத்தை மட்டுமே பிரதிபலிக்கிறது.

மறுபக்கத்தில் பேராசிரியர் மௌனகுரு கூத்து தொடர்பாக வெறும் ஆய்வுகளையும், நூல்களையும் எழுதிக்குவிக்கவில்லை. மாறாக அண்ணாவியாராக, ஆட்டக்காரராக, கொப்பி மனேஜராக, பாட்டு- தாளக் கட்டு - பக்கவாத்தியகாரராக, கொலுப்பாடுபவராக, ஏன்? மேய்த்திரியாராக எத்தனை பாத்திரங்களை சுமந்து, இந்த பணியைச் சாதித்திருக்கிறார் என்பதை கௌரவித்து அவருக்கு எடுக்கப்பட்ட முடிசூட்டு விழா இந்த அமுதவிழா என்பது குறிப்பிடத்தக்கது.

கூத்தை தன் உயிராய், தன் உயிரை கூத்தாய் கொண்டு பேராசிரியர் சி.மௌனகுரு போன்று சமகாலத்தில் தாயகத்தில் பணிசெய்யும் எவரும் இல்லை. பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பின் பேராசிரியர் சி.மௌனகுரு கூத்துக்கு உயிரூட்டி வந்திருக்கிறார் -வருகிறார். சமாந்தரமாக அவரின் வாரிசுகளாக கிழக்கிலங்கை பல்கலைக்கழக கலை கலாச்சார பீட முன்னாள் பீடாதிபதி பால.சுகுமாரையும், விபுலாநந்த அழகியற்கற்கைகள் நிறுவகத்தின் கட்புலத்தொழில்நுட்பத்துறை தலைவர் கலாநிதி சு. சிவரெட்ணத்தையும், சக விரிவுரையாளர்களையும், அவர்களின் மாணவர்களையும் அடையாளம் காண முடிகிறது.

நாட்டுக்கூத்துக்கலையில் ஈடுபாடுகொண்டிருந்த இன்னொரு கிழக்கு மண்ணின் மைந்தன் பேராசிரியர் இ. பாலசுந்தரம். கூத்துக்குடும்பத்தில் வளர்ந்த அவரது ஆர்வம் இயல்பானது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அவர் கூத்தை ஆரம்பித்திருந்த போதும் புலம்பெயர்ந்ததினால் எடுத்தபணியை முழுமையாக பூர்த்தி செய்ய முடியவில்லை. எனினும் புலம்பெயர்ந்த சூழலில் நாட்டுப்புறவியலில் - நாட்டார் இலக்கியம், நாட்டார்கலைகளில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகிறார். இவருக்கு அடுத்தவராக புலம்பெயர்ந்த சூழலில் கூத்துக்கலை வளர்ச்சி பங்களிப்பில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவர் பால .சுகுமார்.





போர்க்கால சூழலில் புலம்பெயர்ந்த தேசங்களில் பரதநாட்டியத்தில் ஆடல், பாடல்,உடை இவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. பரதநாட்டியத்தில் நாட்டுக்கூத்தும், நாட்டுக்கூத்துக்குள் பரதநாட்டியமும் உள்வாங்கப்பட்டிருந்தன. ஆனால் துரதிஷ்டவசமாக இவை அனைத்தும் ஒரு அரசியலுக்கான பிரச்சார யுக்தியையே கொண்டிருந்தன என்பதையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் காலத்தில் பேராசிரியர்கள் அ.சண்முகதாஸ், தில்லைநாதன், சதாசிவம் போன்றவர்களும் பின்னர் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி போன்றோரும் பேராசியர்களாக இருந்தனர். ஆனால் கூத்துப்பணியில் தன்னை அதிகமாக அடையாளப்படுத்திக் கொண்டவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மட்டுமே. மற்றையவர்கள் தம்மை வெவ்வேறு துறைகளில் அடையாளப்படுத்தினர். உதாரணமாக இன்னொரு துறையான தமிழ் இலக்கிய திறனாய்வுத் துறையில் பேராசிரியர்கள் கைலாசபதியும், சிவத்தம்பியும் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள். இலக்கியதிறனாய்வின் சிற்பிகள்-கட்டுடைப்பாளர்கள்.

இதுபோன்ற கட்டுடைப்பு திறனாய்வு கூத்துக்கலைக்கும் தேவை என்பதை மறுப்பதற்கில்லை. அது கூத்தின் மீளுருவாக்கத்தில் பேசப்படுகின்ற நவீன மாற்றங்களை மட்டும் பேசாது. அது பேசுகின்ற கருப்பொருளை கட்டுடைப்பு செய்யவேண்டும். புராண, இதிகாச கதைகளின் பின்னணியில் உள்ள அரசியலை, புனைவுகளை, வர்க்கநலனை, பின்நவீனத்துவ , பெண்ணிய நிலையில் இருந்து கட்டுடைப்பு செய்ய வேண்டும். இதுவே கூத்து மீளுருவாக்கத்தை முழுமையாக்குவதுடன் கூத்தை ஒரு நவீனமாகவும் பிரகடனம் செய்யும். இந்தப் பொறுப்பு இன்றைய இளைய தலைமுறைக்கு உரியது.

பேராசிரியர் மௌனகுருவுக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு நிகராக மட்டுமன்றி அதற்கு மேலாகவும் அடையாளமும், அங்கீகாரமும் வழங்கவேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் ஓய்வு நிலையிலும் கூத்துக் கலையின் வளர்ச்சிக்கு ஓய்வற்று உழைக்கின்றவராக மட்டும் அன்றி, தானே ஆடியும், பாடியும் மேடையை அலங்கரிக்கின்றார். வெறுமனே பல்கலைக்கழக மட்டத்திலான கூத்துசார் விரிவுரைகளை வெறும் தொழிலாக மட்டும் செய்து விட்டு அவர் ஓய்ந்து இருக்கவில்லை. இதனால்தான் அவர் கொண்டாடப்பட வேண்டிய ஒருவராக உள்ளார். அவரைக் கொண்டாடுவது என்பது கூத்தைக்கொண்டாடுவது.

ஆக , கூத்து இவர்களுக்கு மட்டுமா சொந்தம் என்ற கேள்வியின் பின்னணி என்ன ? என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடியும்.

## (★) நாட்டுக்கூத்தா? ஈழக்கூத்தா?

மட்டக்களப்பின் கூத்துக்கலைக் கிராமங்களுள் ஒன்றான மகிழடித்தீவை பிறப்பிடமாகக் கொண்ட திரு. கந்தப்பன் திருநாவுக்கரசு தனது முகப்புத்தகத்தில் இட்ட ஒரு பதிவே★ இரண்டாம், மூன்றாம் அதிர்வுகளுக்கு காரணம். படுவான்கரையின் மூத்த தமிழ் அறிஞர்களில் திரு. திருநாவுக்கரசும் ஒருவர். மகிழை மகேசனைத் தொடர்ந்த அந்த மண்ணின் தமிழ் இலக்கிய ஆய்வாளர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழை சிறப்பு பாடநெறியாகக்கற்று முதலாம் தரத்தில் ( FIRST CLA-S-S) சித்தியடைந்தவர். ஆனால் அவருக்கு உதவி விரிவுரையாளர் நியமனம் கூட மறுக்கப்பட்டது. அந்தப் புறக்கணிப்பு பற்றி பேச இந்தப்பதிவு பொருத்தமற்றது. திரு. திருநாவுக்கரசு எழுப்பியுள்ள கேள்வியை சும்மா கடந்து செல்லமுடியாது என்பதற்காகவே அவரது மொழித்தகுதி பற்றி பேசப்பட்டுள்ளது.

**இது திரு. திருநாவுக்கரசு**
**அவர்களின் முகநூல் பதிவு .**

மட்டக்களப்பில் எமது மூதாதயரால் ஆடப்பட்டு வந்த வடமோடி, தென்மோடி கூத்தினை பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் நாட்டுக்கூத்து என அழைத்தது பலரது மனதை வேதனைப்படுத்தியதை யாம் அறிவோம். விசேடமாக தொல்லியல் ஆய்வாளர் செல்வி க. தங்கேஸ்வரி அவர்கள் வன்மையாகக் கண்டித்து வந்தார். தற்போது ஈழக்கூத்து என சொல்லப்பட்டிருந்தை பார்க்க்கூடியதாக இருந்தது. இதுவும் எந்தளவு பொருத்தம் என தெரியவில்லை. என்று பதிவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு கூத்துக்கலையை எப்படி அழைப்பது நாட்டுக்கூத்து என்பதா? இல்லை ஈழக்கூத்து என்பதா? இது நாட்டுப்புறம் என்ற சமூக, பொருளாதார, அரசியலில் குறைவான வளர்ச்சியைக்கொண்ட கிராமிய சூழல் குறித்து எழுப்பப்படும் கேள்வியாகவே புலப்படுகின்றது. பேராசிரியர் இ.பாலசுந்தரம் இதை நாட்டுப்புறவியல் என்று குறிப்பிடுகிறார். நாட்டார் இலக்கியம், நாட்டார்பாடல்கள், நாட்டார் கலைகள் , நாட்டார் கதைகள் இந்த வரிசையில் நாட்டுக்கூத்தும் நாட்டார் கலைவடிவங்களில் ஒன்றாக அமைகின்றது.

மனித வாழ்வியலின் பூர்வீகம் நாட்டுப்புற கிராமங்களே அன்றி நகரங்கள் அல்ல. கிராமங்களில் இருந்தே நகரங்கள் தோன்றின என்றால் மனித வாழ்வின் பாரம்பரிய பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், ஆடல் , பாடல், கலைகள், விளையாட்டு, உணவுக்கலாச்சாரம் உள்ளிட்ட அனைத்தும் நாட்டுப்புறங்களில் தோன்றியவை. ஆக, பாரம்பரிய கலைவடிவமான நாட்டுக்கூத்து மட்டக்களப்பின் வேளாண்மை பொருளாதார நாட்டுப்புற சூழலில் பிறந்தது. அதை நாட்டுக்கூத்து என்று குறிப்பிடுவதில் உள்ள தவறு என்ன?

ஈழக்கூத்து என்று பொதுப்படையாக அழைப்பது எந்த ஈழத்தை குறிக்கிறது. வரலாறு கூறும் இலங்கைத் தீவையா? அல்லது தமிழ்த்தேசியம் பேசும் பாரம்பரிய தமிழர் தாயக ஈழத்தையா? இலங்கைத்தீவு என்றால் சிங்களமக்களின் கண்டியக்கூத்தை என்ன என்பது? ஈழக்கூத்தில் அது ஒருவகையா? கண்டியநடனமும் ஈழக்கூத்தா? அல்லது தமிழ்தேசிய ஈழம் என்றால் மலையக மக்களின் கூத்துக்கலையை எந்தப்பக்கம் பங்குபோடுவது ? அது ஈழக்கூத்தா? நாட்டுக்கூத்தா? மலையகக்கூத்தா?

முஸ்லீம் மக்களின் அருமையான பேச்சு மொழியிலான கிழக்கின் நாட்டார் பாடல்களை ஈழத்துப் பாடல்கள் என்று அழைக்கமுடியுமாகா?அப்படி அழைப்பது எந்தளவுக்கு பொருத்தமானதுகா?

நாட்டார் பாடல்கள் என்பதில் உள்ள உயிர்த்துடிப்பு ஈழத்துப்பாடல்கள் என்று அழைப்பதில் இருக்கிறதாகா?

உலகின் எல்லா நாடுகளிலும் நாட்டுப்புறம்- இஙீக் மீகூகீநு குஐஈஉ உள்ளது. அந்தப் பிராந்தியங்களுக்கான பாரம்பரிய மக்கள் வாழ்வியலும், கலைபண்பாடுகளும் உள்ளன. இது மனித வரலாற்றின் பொதுநிலை. COUNTRY SIDE என்று சொல்வதில் அவர்கள் பெருமை கொள்கிறார்கள்.

பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களை பேணிப் பாதுகாக்கிறார்கள். அவர்களிடத்தில் எந்த உளவியல் தாழ்வுச்சிக்கல்களும் இருப்பதில்லை.

இந்தப் பெயர்ப் போர் சிந்து பைரவி திரைப்படப்பாடலை நினைவுபடுத்துகிறது:

*பாட்டறியேன் படிப்பறியேன்*
*பள்ளிக்கூடம் நானறியேன்*
*ஏடறியேன் எழுத்தறியேன்*
*எழுத்துவகை நானறியேன்*
*ஏட்டில எழுதவில்ல*
*எழுதிவைக்க தெரியவில்ல*
*எலக்கணமும் படிக்கவில்ல.*
*தலக்கணமும் எனக்கு இல்ல.*

*சேரிக்கும் சேர வேண்டும்*
*அதற்கும் பாட்டுப்பாடு*
*அம்மி அரைச்சவ*
*கும்மி அடிச்சவ*
*நாட்டுப்புறத்தில*
*சொன்னதப்பா*

நாட்டுக்கூத்து , நாட்டார் பாடல்கள், நாட்டார் இலக்கியம் என்பது அவமானமா? உளவியல் தாழ்வுச்சிக்கலா? படுவான்கரையின் பெயரையும் எழுவான்கரை என்றோ அல்லது ,ஙிஉகுகூ இஙிகுகூ என்றோ அமெரிக்கப் பாணியில் மாற்றினால் என்ன?

எமது மூதாதயர் எமக்கு விட்டுச் சென்ற அடையாளத்தை, முகவரியை ஈழப்போர்வைக்குள் தொலைக்கப் போகின்றோமா?

(★) சு. வித்தியானந்தனின் மட்டக்களப்பு மாணவர்கள் பொறுப்பு

## சொல்ல வேண்டும்!

இது ஒரு வேடிக்கையான குற்றச்சாட்டு. வாத்தியார் விட்ட தவறுக்காக (?) அவரின் மாணவர்களை குற்றக் கூண்டில் ஏற்றி தண்டனை வழங்கவேண்டும் என்று கோருவது எந்த வகையில் நியாயம். மட்டக்களப்பின் நாட்டுப்புற கிராமங்களில், வயல்வாடிகளில், படுவான் கரையில் பாரம்பரியமாக ஆடப்பட்டுவந்த கூத்தை பல்கலைக்கழகத்தில் ஆடுகிறார்கள் என்பதற்காக நாட்டுக்கூத்து அல்ல ஈழக்கூத்து என்று எப்படிச் சொல்லமுடியும்? இதற்கு பின்னால் ஒரு அரசியல் இருக்கிறது என்று எழுகின்ற சந்தேகம் உண்மையா?

நாட்டுப்புறக்கலையான நாட்டுக்கூத்து மட்டக்களப்பின் நாட்டுப்புறச் சொத்து. எமது மூதாதயர் எமக்கு விட்டுச் சென்ற முதுசம். இது தனிநபர்களுக்கோ, எந்த ஒரு குழுவுக்கோ சொந்தமானதல்ல. மக்களின் பொதுச்சொத்து - பொதுவுடமை.

நாட்டுக்கூத்து என்பதே அதன் வளர்ச்சி வரலாற்றை, பூர்வீகத்தை, பரிணாம வளர்ச்சி மாற்றங்களை எதிர்கால சந்ததிக்கு சான்று பகர்வதாக அமையும். யாரும் கள்ள உறுதி எழுதி பெயர்மாற்றம் செய்யவேண்டியதேவை இல்லை. அதுவும் ஈழக்கூத்து என்ற பொதுமைப்படுத்தல் எந்த வகையிலும் பொருத்தமற்றது மட்டுமன்றி ஒரு வகையான கலை அபகரிப்புமாகும்.

# கோவிலூர் செல்வராஜனின் கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள் நூல் வெளியிடப்பட்டது









**(பாறுக் ஷிஹான் )**

கோவிலூர் செல்வராஜனின் ‘கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள்’ நூல் வெளியிடப்பட்டது. கோவிலூர் செல்வராஜனின் ‘கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள்’ நூல் கல்முனை நெற் ஊடக வலையமைப்பால் வெளியிடப்பட்டது! பன்முக ஆளுமை இலக்கியவியலாளர் கோவிலூர் செல்வராஜன் எழுதிய ‘கிழக்கிலங்கையின் மறைந்த சில இலக்கிய ஆளுமைகள்’ நூல் கல்முனை நெற் ஊடக வலையமைப்பினால் கடந்த சனிக்கிழமை (24) மாலை வெளியீட்டு வைக்கப்பட்டது. கல்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் ஓய்வுநிலை அதிபர்கா. சந்திரலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் அதிதிகளாக அம்பாறை மாவட்டபதில் அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நூல் வெளியீட்டுரையை வே. அரவிந்தன், வாழ்த்துரை தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும் கல்முனை நெற் பிரிமாணம் பிரதம ஆசிரியரும் சிரேஸ்ட்ட ஊடகவியலாளருமான க. குணராசா, நூல் அறிமுக உரையை சஞ்சீவி சிவகுமார், ஆகியோர் வழங்கியதோடு அதிதிகள் உரையை தொடர்ந்து நூலாசிரியர் பதிலுரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியை பாசம் புவி தொகுத்து வழங்கினார். செல்லத்துரை சுரேஸின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

கல்முனை நெற் பரிமாணம் பத்திரிகையில் இதுவரை வெளிவந்த கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் வாழ்ந்து மறைந்த இலக்கிய ஆளுமைகள் 38 பேரின் குறிப்புகள் அடங்கியதாக முதற்கட்ட ஆவணமாக இந்த நூல் வெளி வந்துள்ளது அடுத்த பாகமும் ஏனையோரின் குறிப்புக்களுடன் வெளியிடப்படும் என நூலாசிரியரும், கல்முனை நெற் குழுமத்தினரும் தெரிவித்தனர்.

இந் நிகழ்வில் மறைந்த இலக்கிய ஆளுமைகளின் குடும்ப உறவினர்கள், இலக்கிய ஆர்வலர்கள் என பலர் பங்குபற்றியிருந்தனர்.

இந் நிகழ்வுக்கு இலக்கியவியலாளர் அமரர் முகில்வண்ணன் நினைவாக அவரது பிள்ளைகள் அனுசரனை வழங்கியிருந்தனர்.

# மகாவலி அதிகார சபை மற்றும் மேச்சற்தரை போன்ற பிரச்சனைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல்!!




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மகாவலி அதிகார சபை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேச்சற்தரை போன்ற பிரச்சனைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடலொன்று இன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாநிதி பத்மராஜா அவர்களின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த விசேட கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில், வர்த்தக இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கருணாகரம் ஆகியோரது பங்களிப்புடன் இடம்பெற்றது.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது மகாவலி அதிகார சபை மற்றும் மேச்சற்தரை தொடர்பிலான பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாகவும் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போது எதிர்வரும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு முன்னர் விசேட கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்து இது தொடர்பில் ஆராய்வது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த கலந்துரையாடல் இன்று இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது மகாவலி அதிகார சபையின் எல்லைப் பரப்புகள் மற்றும் அதன் செயற்பாடுகள், எவ்வாறான செயற்பாடுகளை எதிர் காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர் என்பது தொடர்பாகவும் இதன்போது விசேடமாக கலந்துரயாடப்பட்டது. இதன்போது மகாவலி அதிகாரசபையின் வீ பிரிவிற்கான வதிவிட திட்ட முகாமையாளர் இந்திக்க ரணவீர கருத்து தெரிவிக்கையில் இனிவரும் காலங்களில் மகாவலி திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு திட்டம் தொடர்பாகவும் முடிவுகளை மேற்கொள்ள முன்னர் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு, பிரதேச ஒருங்கிணைப்பு குழு மற்றும் மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களைபின்பற்றியே தமது திட்டங்களை மேற்கொள்ள உள்ளதாக இதன் போது தெரிவித்திருந்தார். அத்தோடு மகாவலி காணிகளை வனவள திணைக்களத்திற்கு வழங்கப்படுவது தொடர்பாகவும் மாவட்ட நிர்வாகம், மாவட்ட அரசியல் பிரதிநிதிகளிடம் தெரியப்படுத்தி அவற்றின் பிரகாரம் முடிவுகளை எடுப்பது தொடர்பாகவும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

மகாவலிக்கு உட்பட்ட வயல் காணிகள் தொடர்பாகவும், சூரிய மின் உற்பத்தி மேற்கொள்வதற்கான காணிகளை விடுவிப்பு செய்வது தொடர்பாகவும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இவை தொடர்பிலான இறுதி தீர்மானம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முன்னெடுக்கப்படுமென இரண்டு இராஜாங்க அமைச்சர்களினால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், இராஜாங்க அமைச்சர்களின் ஒருங்கிணைப்பாளர்கள், இராஜாங்க அமைச்சர்களின் பிரத்தியேக செயலாளர்கள், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பண்ணையாளர்கள் என துறைசார் அதிகாரிகள் பலரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

# அரச உத்தியோகத்தர்களின் உடல் உள ஆரோக்கியத்தினை மேம்படுத்த விசேட வேலைத்திட்டம்

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட அரச உத்தியோகத்தர்களின் உடல் உள ஆரோக்கியத்தினை மேம்படுத்த விசேட வேலைத்திட்டம் ஒன்றினை மாவட்ட செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் தொற்றா நோய் மற்றும் மனஅழுத்தங்களை தவிர்க்கும் தூர நோக்கில் எரோபிக் நடனத்துடனான உடற் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை வழிகாட்டலின்கீழ், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்தின் நேரடிக் கண்காணிப்பில் இப்பயிற்சி நெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் சிறுவர் மற்றும் மகளிர் உளவள உதவியாளர் திருமதி. என். ஜனார்த்தனியின் ஒருங்கிணைப்பில் மண்முனை மேற்கு வவுனதீவு பிரதேச செயலகத்திற்கான பயிற்சி வகுப்பு கடந்த 16 ஆந்திகதியும், கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி கடந்த 22 ஆந்திகதியும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

எரோபிக் நடணத்துடனான உடற்பயிறச்சி மற்றும் விழிப்புணர்வு செயலமர்வுகள்யாவும் எரோபிக் பயிற்றுவிப்பாளரும், கராத்தே பயிற்றுவிப்பாளருமான திருமதி. ஆர். முருகேந்தினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடுத்த கட்ட பயிற்சி செயலமர்வுகள் காத்தான்குடி, கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி மற்றும் ஏனைய பிரதேச செயலகங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.